
REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர மார்கழி உஉ 6-1-52 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 26




சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்

திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக் கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ தென்னிலங்கையில் வசிப்போர்க்குத் தென்னை, தேயிலை, றப்பர் முதலியன எவ்வளவுபயனை அளிக்கின்றனவோ அப்படித்தான் புகையிலையும் யாழ்ப்பாண மக்கட்கு.

# கமக்காரரின் பெருங் கவலை

## புகையிலை வியாபாரத்துக்கும் ஆபத்தா?



— யாழ்ப்பாணக் கமக்காரரின் உயிர்நாடி —

யாழ்ப்பாணம், 4-1-52

**யா**ழ்ப்பாணக் கமக்காரர்கள் பணக்காரர்களல்ல. இவர்கள் தமது வாழ்க்கைக்கு ஆதாரமான கமத்தொழிலை நடாத்துங்கால் அடையும் சிரமங்களுங் கஷ்டங்களும் இம்மட்டன்று. நீர்வளம் நிலவளம் நிறைந்த நாடன்று யாழ்ப்பாணம். மிகவும் பிரயாசப்பட்டு நெற்றியில் வியர்வை நிலத்தில் சிந்த இடைவிடாது வேலைசெய்தாற்றான் ஊதியத்தை அடையலாம். சென்ற நூறுவருட காலங்களுக்கு மேலாக இவர்கட்குச் சிறிது நன்மையளித்து வந்தது புகையிலைச் செய்கையே. மலையாளத்துக்குப் புகையிலை வரையின்றி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இந்த வியாபாரத்தின் காரணமாகக் கமக்காரரின் நிலை தட்டுப்பாடின்றி உறுதிப்பட்டு வந்ததெனலாம். இந்த மலையாளப் புகையிலை வியாபாரத்துக்குப் பன்முறையாக ஆபத்துகள் தடைகள் ஏற்பட்டன. என்றாலும் கமக்காரருடைய ஊக்கத்தாலும் பொதுசனப் பிரதிநிதிகளின் சலியாத உழைப்பின் பேறாகவும் இந்த விக்கினம் பெருங் கெடுதியை விளைக்காது தடுக்கப்பட்டது.

இப்போது இந்திய அரசினரின் புதிய ஏற்பாடுகளின் படி இந்த வியாபாரம் சிறிது காலத்துள் முற்றாக நின்றுவிடும் போலிருக்கின்றது. இந்தியாவிற் பயிரிடப்படும் புகையிலையை மலையாளத்தில் நன்கு மதித்து ஏற்கச் செய்வதே அந்நாட்டரசினரின் நோக்கம். அவசியமின்றி அளவுகடந்து பெருந் தொகைப் பணம் புறநாடுசெல்வதை இந்திய அரசினர் விரும்புகின்றாரில்லை. இந்திய அரசினர் தம் நாட்டு மக்கட்கு நன்மை செய்வதை எவரும் ஆட்சேபிக்க வியலாது. என்றாலும் இவ்வளவு காலமாக நடந்துவந்த இந்த வியாபாரத்தை எடுத்தாற்போற் குறைக்க முயல்வது முறையாகாது. இலங்கையிலிருந்து பல பொருட்கள் இந்தியா செல்கின்றன. இந்தியாவிலிருந்து எத்தனையோ பொருள்கள் இலங்கைக்குள் இறக்குமதியாகின்றன. அவைகளுள் புகையிலைக்கு மாத்திரம் தடை தாமதங்களும், அளவுகடந்த தீர்வை வரிகளும் விதிப்பது நியாயமாகாதே? இந்தியாவில் மிகுதியாகப் பயிரிடப்படும் மிளகாய் வெண்காயம் சாக்கு வகைகள் இலங்கைக்குள் தாராளமாக இறக்குமதியாகவில்லையா? இவற்றுக்காக இலங்கையிலிருந்து வெளியேறும் பணம் இம்மட்டா? விஷயமிவ்வாறாகப் புகையிலையை இலங்கையிலிருந்து மலையாளத்துக்குப் பழமைபோல் ஏன் ஏற்றுமதி செய்யக் கூடாது? மலையாளம் முதலிய பிரதேசங்கட்கு இப் புகையிலை வேண்டாமாயின், அல்லது இது போன்ற புகையிலை அங்கு கிடைக்குமாயின் இதன் இறக்குமதியை அங்கு தடுக்கலாம். அப்படி யொன்றுமில்லாதிருக்கும்போது எதற்காக இந்த வியாபாரம் தடைப்பட வேண்டுமோ?

சமீபத்தில் இலங்கை — இந்திய அரசினர்களின் பிரதிநிதிகள் சந்தித்து இரு நாடுகட்குமிடையிலுள்ள வியாபார விஷயங்களைப்பற்றி நீடித்துப் பத்துநாட்கட்குமேலாக ஆலோசனை செய்தனர். இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் கொப்பறா, தேங்காய் நெய், தேயிலை, பிண்ணாக்கு, காரீயம், புகையிலை என்னும் பொருட்களைப் பற்றி நன்கு விசாரணை செய்து யோசித்தனர். எல்லாப் பொருள்களைப்பற்றியும் ஏற்ற முடிவுக்கு வந்தனராம். ஆனால் புகையிலையைப்பற்றி எவ்வித முடிபினையுங் காணோம். ஆலோசித்ததுடன் விட்டுவிட்டனர் போலும். இலங்கையரசினர் இவ்விஷயமாக என்ன செய்துள்ளார்? இதைக் குறித்து வியாபாரப் பொருத்தனை எதற்காக ஏற்படவில்லை என்பதைப்பற்றி அறிய யாழ்ப்பாணமக்கள் மிக்க ஆவலுடையர். யாழ்ப்பாணக் கமக்காரரை இந்த அரிய சந்தர்ப்பத்தில் அரசினர் பாதுகாக்காததன் காரணம் யாதோ?

நிற்க, இப்போது இலங்கைப் புகையிலைச் செய்கை விஷயமாக விசாரணை செய்ய ஒரு சபை ஏற்பட்டு ஆராய்ச்சி செய்து வருகின்றது. மலையாள வியாபாரத்தில் இனி முற்றாக நம்பியிருக்கவியலாதென்றும் இலங்கையிற் பயிர் செய்யப்படும் புகையிலையை வேறு வழியிற் செலவிடுவதே முறையென்றும் அரசினர் கருதுகின்றனர். மலையாளத்துக்கு ஏற்றும் புகையிலையை நிற்பாட்டி 'சிகரட்' செய்யும் 'உவைட் பேளி' முதலிய இனங்களைப் பயிர் செய்யக் கூடாதாவென்று ஆராய்கின்றனர். இப்புதிய முறைகளை அனுட்டிப்பது அவசியந்தான் என்றாலும் யாழ்ப்பாணக் கமக்காரர் மிக்கஇலாபத்துடன் இப் புதிய முறைப் புகையிலையை உண்டாக்குவது விரைவிற் கூடிய தொன்றன்று. விசாரணைச்சபையினர் இது விஷயமாகச் செய்யும் ஆராய்ச்சியின் முடிவினை யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர். மேலும் மலையாளப் புகையிலை வியாபாரம் இன்னும் சில காலத்துக்கு நிலைபெற்றாற்றான் யாழ்ப்பாணக் கமக்காரர் கவலையின்றி வாழவியலும். தென்னிலங்கையில் வசிப்போர்க்குத் தென்னை, தேயிலை, றப்பர் முதலியன எவ்வளவு பயனை அளிக்கின்றனவோ அப்படித்தான் புகையிலையும் யாழ்ப்பாண மக்கட்கு. அரசினர் இவ் வியாபார விஷயமாகக் கூடிய அக்கறைகொண்டு அதை நிலைபெறச் செய்தல் வேண்டும். அப்போதுதான் யாழ்ப்பாணக் கமக்காரனுக்கு நிம்மதியுண்டு.

கட்டுரைப் போட்டி

முடிவு திகதி 31-1-52

விபரங்களுக்கு 2-ம் பக்கம் பார்க்கவும்

# தலைசிறந்த கலா இரசிகர்

## அதிபர் சுவாமிநாதன் அவர்கள் சேவைநலம்

**யா**ழ்ப்பாணம் திருநெல்வேலிச் சைவாசிரியகலாசாலையில், அதிபராக 21 வருடங் கடமையாற்றிய மயிலிட்டி திரு. சி. சுவாமிநாதன் பி. ஏ. அவர்களுக்கு 29-12-51-ல் பழைய மாணவர்களால் ஒருபசாரவிழா நடாத்தப்பட்டது. புதிய அதிபர் திரு. க. கந்தையா பி. ஏ. அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. சுவாமிநாதன் அவர்கள் இக் கலாசாலைக்கு ஆற்றிய தொண்டுகளை மிகவும் பாராட்டினர்.

அதிபர் 21 ஆண்டு சேவை செய்தமையைப் பாராட்டும் நோக்கமாக 21 மாணவர்கள் 21 ஏடுகளில் 21 மாலைகள் சூட்டி உபசாரப் பத்திரத்தைப் படித்துக் கொடுத்தனர். வெள்ளியினால் பன்னீர்ச்செம்பு-கும்பா தட்டங்களும், வெள்ளியினால் தேநீர்ப்பாத்திர அடுக்குகளும், பூக்கிண்ணங்களும், விநாயகர்படமொன்றும் உபகரிக்கப்பட்டன.

பாராட்டுரையிற் பழைய மாணவர்களில் ஆண்களுக்காக 'பிரமஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மாவும், பெண்களுக்காக செல்வி சி. அன்னபூரணமும் பேசினர். பின்னர் கல்வி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. கே. கனகரத்தினம் அவர்கள் திரு. சுவாமிநாதனை மிக மிகப் பாராட்டி, இவ்விதம் உயர்ந்த முறையில் உபசார விழாவொன்றை எக்காலத்திலும் எவ்விடத்திலும் காணமுடியாதென்றும், 600க்கு மேலான ஆசிரிய சேனையொன்றை அதிபர் தமக்குப் படைத்துணையாகக் கொண்டுள்ளாரென்றும் மிக ஆர்வமாக - அழகாகப் பேசினர். சிரேஷ்ட பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபரின் கலாரஸனையையும் முற்போக்கான செயல்களையும் புறநானூற்றுக் கதையொன்றினையும், பழைய வரலாறுகளையும் ஆதாரமாகக் கொண்டு நகைச்சுவையுடன் எடுத்துரைத்தனர்.

அதிபர் தமது பேச்சில் தம்மைப் பாராட்டிய அன்பர்களைப் பாராட்டியதுமன்றி இவ்வித உபசாரத்துக்குதவியான பழைய மாணவர்களுக்குத் தமது பூரண ஆசீர்வாதத்துடன் மனமுவந்த நன்றியையும் தெரிவித்தார். யாவர்க்கும் அதிபரின் சேவை நலம் பாராட்டு மலரொன்று பழைய மாணவசங்கத்தாரால் அளிக்கப்பட்டது. அதில் ஒரு பகுதி வருமாறு:

திரு. சுவாமிநாதன் அவர்கள் பி. ஏ படித்த காலத்தில் ஐக்கிய இயக்கத்தைப் பற்றி ஆங்கில இந்துசாதனத்துக்குக் கட்டுரை கட்டுரையாக எழுதி, ஈற்றில் புத்தக ரூபமாக வரச்செய்தார். அது அக்காலத்திருந்த இலங்கை மோனிங் லீடர் பத்திராதிபராலும் அரசாங்க ஐக்கிய சங்க உத்தியோகத்தராலும் நன்கு பாராட்டப்பட்டது.



திரு. சி. சுவாமிநாதன், பி. ஏ. அவர்கள்

ஈழமணியெனத் திகழ்ந்த விபுலாநந்தஅடிகளாரின்முகவுரையோடுவெளியிடப்பட்ட பிரித்தானிய சக்கராதிபத்தியத்தின் சரித்திரச் சுருக்கம் என்னும் இதிகாசநூலின் ஆக்கியோனும் ஸ்ரீ சுவாமிநாதன்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

# பகவத்கீதை வெண்பா

ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்க ஆண்டுவிழாக் காலத்தில் முதன் முதலாக அரங்கேற்றப் பெற்ற பெருமையினையுடைய நூல் பாரத வெண்பா என்பதே. இந்நூலினை இயற்றியவர் மட்டக்களப்பு, அரசினர் ஆங்கில கலாசாலைத் தமிழ் ஆசிரியர் திரு. பெரியதம்பிப்பிள்ளையாவர். ஆகவே, இந்நூல் பெரிய தம்பிப்பிள்ளை பாரதவெண்பா என வழங்கப் பெறுவதே பொருத்தமானதாகும். இதனைச் சங்கத்தார் நன்காராய்ந்து தங்கருத்தினை வெளியிடுவார்களாக.

இராமாயணம் — கம்பர் இராமாயணம், வால்மீகி இராமாயணம் எனவும், பாரதம் — வில்லிபாரதம், நல்லாப்பிள்ளை பாரதம் எனவும் வழங்கப் பெறுவதை யாம் அறிவோம். பகவத்கீதை வெண்பா எனப் பெயரிய பிறிதொரு நூலுண்டென்பதையும், பகவத்கீதையை வெண்பா யாப்பில் கூறும் வேறு நூலுண்டென்பதையும் பின்வரும் செய்யுள்களால் தெளிபக்கிடக்கின்றது.

### தமிழ் வெண்பா

இவ்வுலகில் ஆதியினில் என்றூல் இயம்பியவை, எவ்வமிலாய் கேளாய் இருநிலையாம்—செவ்வியுறு, சாங்கியர்க்கு ஞானமும் தக்கவுயர் யோகியருக், கோங்கியதோர் கன்மமுமென் றோர்ந்து.

நீயெனக்கு நேசனும் நீங்காத பத்தனும், ஆயிருத்த லாலேதொல் யோகதையே — தூயவுனக், கின்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# கட்டுரைப் போட்டி

★

## மூன்று பரிசுகள்

ஆலயப் பிரவேசத்தை ஆதரித்து எழுதும் கட்டுரைப் போட்டி ஒன்றினை ஈழகேசரி ஒழுங்கு செய்துள்ளது. வதுளையில் வதிந்து காலஞ்சென்ற தமிழ்ப் பெரியாரான திரு. ஆர். வைத்தியலிங்கம் அவர்கள் இப்போட்டிக்குரிய பரிசுகளை ஏற்கனவே வழங்கியுள்ளார்கள்.

### விதிகள் :

1. இப்போட்டியில் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அனைவருங் கலந்துகொள்ளலாம். பிரவேசப்பணம் எதுவுங் கிடையாது.
2. ஆலயப் பிரவேசத்தை ஆதரித்தே கட்டுரை எழுதப்பட வேண்டும்.
3. கட்டுரை இதுவரை வெளியிடப்படாததாக இருத்தல் வேண்டும்.
4. மொழிபெயர்ப்பாகவோ தழுவலாகவோ இன்றிச் சொந்தமாகத் தமிழில் எழுதப்பட வேண்டும்.
5. 1952-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் தேதிக்குள் வருங் கட்டுரைகளே பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
6. கட்டுரை தெளிவான கையெழுத்திற் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி அனுப்பப்படவேண்டும்.
7. கட்டுரை 'ஃபூல்ஸ்காப்' 6 முழுப் பக்கங்களுக்குக் குறையாமலும் 9 பக்கங்களுக்குக் கூடாமலும் இருக்க வேண்டும்.
8. கட்டுரையின் முதற் பக்கத்தில் எழுதியவரின் பெயர், விலாசம் என்பன குறிப்பிடப்படவேண்டும்.
9. பரிசு பெறும் கட்டுரைகளையும் பிரசுரத்துக்கு உகந்ததெனக் கருதப்படுங் கட்டுரைகளையும் பிரசுரிக்கும் உரிமை ஈழகேசரிக்கே உரியது.
10. பரிசு பெறுத கட்டுரைகள் திருப்பி அனுப்பப்பட மாட்டா.

இப் போட்டிக்கு 3 பரிசுகள் உள.

**1-ம் பரிசு ரூ. 50/-**
**2-ம் பரிசு ரூ. 30/-**
**3-ம் பரிசு ரூ. 20/-**

இப்போட்டிக்குப் பின்வருவோர் பஞ்சாயத்தார்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் :

1. திரு. வி. செல்வநாயகம் அவர்கள், எம். ஏ., தமிழ் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்.
2. திரு. கா. பொ. இரத்தினம் பி. ஏ., பி. ஓ. எல்., தமிழ் வித்துவான், தமிழ் விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய கலாசாலை, மகாறகம.
3. திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள், தமிழ்ப் பண்டிதர், தமிழ் விரிவுரையாளர்: பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை.
4. திரு. க. நவரத்தினம் அவர்கள், ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
5. ஆசிரியர், ஈழகேசரி

கட்டுரைகள் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

கட்டுரைப் போட்டி,
ஈழகேசரி நிலையம், சுன்னுகம்.

போட்டி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் பஞ்சாயத்தாரின் தீர்ப்பே முடிவானது.

போட்டி சம்பந்தமாக எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டா.

சகல பயிர்களுக்கு
C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனுக

நாங்கள்
C C C
கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறேம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The
**Colombo Commercial Company,**
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4489]

சேக்கிழார் ஆராய்ச்சி 2.

# சித்திரமணிக் கோபுரம்

## பெரியபுராணம் தரும் உண்மைகள்

டொக்டர்
மா. இராசமாணிக்கம்பிள்ளை

இவர் நேரிலே தரிசித்துப் பாடினார் என்பதற்கு இன்னுமோர் விநோதமான ஆதாரமுள்ளது. அமர்நீதிநாயனார் அடிகள் வாழ்ந்த ஸ்தலத்திற் சென்று கண்டேன். தேவாரங்களில் சரிதத்திற் குறிப்பிட்டவாறு "அடியாராக வந்த இறைவன் இவர்கள் பக்குவநிலையறியக் கருதி அடைக்கலமாகக் கொடுத்த கௌபீனஉடை நிறையளவுக்கு நீவிர் தராசில் நிற்கவேண்டுமெனப் பணித்தபடி கணவனும் மனைவியுமாக ஏறிநின்றனர்" என்றே குறிப்பிடப்பட்டுளது. ஆனால்பெரியபுராணத்துக்கணவனும் மனைவியும் பிள்ளையும்? ஏறிநின்றனர் எனக் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு ஏதோ காரணமிருக்க வேண்டுமெனச் சென்று நேரிற் தரிசித்தால் அங்கே அமர்நீதிநாயனார் சிலையும் மனைவியின் சிலையுமிருப்பதோடு மனைவிகையில் ஓர் குழந்தை வைத்திருக்கும் தோற்றமும் செதுக்கப்பட்டிருந்து. அதுகண்டு யார்தான் சேக்கிழார் பெருமையையும் அவரது ஆராய்ச்சித் திறனையும் உண்மையுரைக்கும் தெளிவையும் புகழமாட்டார்கள்.

இனிச்சண்டேசுரநாயனார் சரிதத்தை எடுப்போம். சண்டேசுர நாயனாருக்கு இறைவன் தன் திருவடிக்கீழோர் தலைமறைவு கொடுத்துத் தன் முடியிற் சூடிய கொன்றைமாலையை எடுத்துச் சண்டேசுரர் முடியிற் சூடி விளங்கும் காட்சி மிக விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுளது. இக் குறிப்பை மனதில் வைத்துச் சேக்கிழார் முதலமைச்சராக இருந்ததும் 1-ம் இராசேந்திர சோழனாற் கட்டப்பட்டதும் ஆகிய கங்கைகொண்ட சோழீச்சரப்பதிக்குச் சென்று பார்வையிட்டேன். இரக்கமிக்க புண்ணியவான்களாகிய அரசாங்கத்தார் காவேரிக்கு அணைகட்ட இடித்த பகுதியைவிட்டு மிகுதியாகப் பழுதடைந்திருக்கும் 12 அடி அகலமான சுவர்களில் உள்ள சித்திரங்களைக் கவனித்தேன் இன்னும் புதுமை மங்காது. அவை சேக்கிழார் குறிப்பிட்டவாறு விளங்குவதைக் கண்டு யான் பிரமையுற்றேன்.

### கைலை சென்ற காட்சி

அடுத்தபடியாகச் சுந்தரர் கைலை சென்ற காட்சி வெள்ளானைச் சருக்கத்தில் குறிப்பிடப்பட்டது. அதிற் குறிப்பிட்டவாறு ஆனையிலும் சேரமான் பெருமான் நாயனார் குதிரையிலும் சென்ற காட்சி வஞ்சிமாநகரின் கோட்டத்து உள்ளேயுள்ள இருள் நிறைந்த கோயிற் பிராகாரத்துச் சுவர்களில் தீட்டப்பட்டிருப்பதைக்கண்டு மிக வியந்தேன். அதிற் கடலலை குதிரையின் குளம்புகளை அலைக்கும் காட்சி கூட அச்சுவர் ஓவியங்களிற் குறிக்கப்பட்டிருந்தன. இக் காட்சிகளைப் புகைப்படமெடுத்து டில்லி அரசினர் காட்சிச்சாலையில் வைத்திருக்கிறார்கள். மங்கையர்க்கரசியார் புராணத்தில் மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் என்ற அடி இப்போது நினைவுக்குவருகின்றது. இங்கே எங்கள் தெய்வம் என்ற உளப்பாட்டுத்தன்மை சைவசமயத்தில் வாழும் வாழ்ந்துவரும் எல்லாரையும் உளப்படுத்தி எங்கள் தெய்வமென நின்றது என்பதும் மாறன் பட்டத்தரசியாகிய சோழர்குலக் கன்னியின் இயற் பெயர் 'மானியார்' என்பதும் திருஞானசம்பந்தப்பிள்ளையார் சோழநாடு போலப் பாண்டி நாட்டுக்கும் சைவசமயம் தழைத்தோங்க வழி செய்தவராதலால் அவரை மங்கையர்க்கரசி என்று பெயரிட்டுச் சைவ உலகு அழைக்க வழி செய்தார் என்பதும் நோக்கத்தக்கன.

பல்லவ படை எழுச்சியால் சமணபுத்த மதங்கள் தலைதூக்கலாயின. பாண்டியன் நின்றசீர் நெடுமாறனே சமயம் மாறினான். அவனைச் சைவத்துக்குத்திரும்பவந்து நிலைப்பிக்கச் செய்து பாண்டி நாட்டைச் சமணப் படுகுழியிலிருந்து மீட்டபெருமை மங்கையர்க்கரசியார்க்கும் குலச்சிறையாருக்குமுரியது. ஆதலால் மாறனுக்கு வாழ்க்கைத் துணைமாத்திரமல்ல சைவ வழித்துறையுமாக அமைந்தாள்.

தற்கால ஆங்கிலேய நாகரீக வழக்கு மனைவி பெயரையும் சேர்த்துத் தன் பெயருடன் வழங்கும் முறை. இது சேக்கிழார் காலத்தே தமிழ்நாட்டு நாகரீகத்தில் கலந்திருந்தது. உதாரணமாக "சங்கிலிக்கும் எனக்கும அருள் பற்றுய பெருமானே" என்றும் 'பரவைக்கும் எனக்கும் பற்றுப பெருமானே' என்றும் நயம்பட அமைந்த நலம் நோக்குபவர்க்கு இன்பத்தை அளிக்கவல்லது.

### எட்டுவரியில்

அத் தேவாரங்களில் இன்னோர் பகுதி திருமருகல் பதியைக் குறிப்பிட்டமையாகும். இதிற் காணப்படும் சரிதை மிக இன்பமானது. ஓர் தனவந்தனுக்கு 7 பெண்கள். அவன் தன்து மருகனுக்கு ஒவ்வொருவரையும் தருவதாக அனுப்பி ஆறுபேரைப் பொருள் கொடுப்போருக்கு மணம் செய்து கொடுத்துவிட்டான். ஏழாவது பெண் அப் பரிதாபத்தைப் பார்த்து அவன் மீதிரங்கி உடன் போக்கு நிகழ்த்தினள். இடைவழியில் அரவுதீண்டி அவன் இறக்கிறான். அந்தநிலையில் சப்பந்தர் விடம் தீர்ப்பதற்காக 8 செய்யுட்கள் பாடினார். அந்த எட்டுத்தேவாரப் பொருளையும் பிழிந்து 8 வரியில் சேக்கிழார் அடக்கிவிட்டார். தேவாரப் பதிகச் சந்தம் இவரது புராணப் பகுதியிலும் அமைந்திருப்பது ஒப்பு நோக்குவார்க்கு நன்கு புலனாகும். இவ்வாறே சுந்தரர் பித்தாபிறை சூடி பிரபந்தம் பாடிய அதே சந்தத்தில் சேக்கிழார் புராணமும் செல்வதைக் காணலாம்.

பெரியபுராண நாயன்மார்களில் சுந்தரர் இரண்டு வரியாற் போற்றிய ஒருவர் கழற்சிங்க நாயனாராகும்.

"கடல் சூழ்ந்த புவியெல்லாம்
காத்தளிக்க வல்ல
காடவர் கோன் கழற்சிங்கன்
அடியார்க்கு மடியேன்"

என்பது திருத்தொண்டத்தொகை. கழல் என்றமையால் அவன் அரசிற் சிறந்தானென்பது புலனாகின்றது. இவர் பல்லவ அரசனாவார். இப் பெயருடைப் பல்லவ அரசன் யார் என ஆராய்ந்தால் 3-ம் நந்திவர்மப்பல்லவனே சரித்திரத்துக்குறிப்பிட்ட சகல அம்சங்களு மொத்தவனாகிறான். திருவிடைமருதூர் அவனி நாரணன் திருக்குளக் கல்வெட்டில் அவனி நாரணன் கழற்சிங்கன் எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே சான்றாகும்.

# கர்மவீரன் படேல்

★

— வித்துவான் சு. உமைதாணுபிள்ளை —

(சென்றவாரத் தொடர்ச்சி)

காரியங்கள் கணித்தறியும் ஒருகணக்கன்
காலமூன்றுங் கடந்துநின்ற கர்மவீரன்
வீரியமாய்ச் சிக்கலான விஷயத்தை
வீரர்களும் சூரர்களும் ஏற்குவண்ணம்
காரியமாய்க் கணிசமாக அதைவிளக்கி
காரியத்தில்வென்றிகாணும்ஒருநிபுணன்
சீரியநற் சிற்பியாகச் சிறந்துநின்று
சீர்ப்படுத்தும்ஜீவசக்தி மறைந்ததந்தோ!

மாருத உளமுடைய மனம்படைத்தோன்
மலையசையின் நிலையசையா மகாவீரன்
கூறுன இந்தியாவை ஒன்றாக்கிக் [டோன்
குமரிமுதல் இமயம்வரை அளந்துகண்
வேறுக்கும் வீணருக்கு உருக்குமனிதன்
[மனிதன்
வேணுமளவும் பாமரர்க்காய் உருகும்
சீராக்குங் காந்திஜியின் ஜீவநாடி [தந்தோ!
தினந்தேடித் தவிக்கவிட்டு மறைந்த

மண்ணடங்க நிறைந்தபுகழ்நிதமுடையான்
மாசற்றதேசபக்தன்மகாபுருஷன் [யான்
எண்ணடங்க வென்றிகாணு மியல்புடை
இணையில்லா ஒருதலைவன் இளஞ்சிங்கம்
கண்ணடங்கக் காட்சிதரும் கட்டழகன்
கனவெல்லாம்நனவாக்கும் ஒருகனவான்
விண்ணடங்க ஒன்றாக்கி நித்தமாளும்
விருப்போடுநமைவிட்டுப் பிரிந்தனரோ?

பாராளும் பாமரர்க்காய் நிதமுழைத்துப்
பாருலகில் அவரோடு நீமறைந்தாய்
தாராள மாயிருந்து காஷ்மீரின்
தலைவிதியைக் கண்டுகுடி யிருத்தாமல்
வேறாளும் விண்ணுலகை விருத்தியாக்கும்
விருப்போடுமுன்னெழுந்துவிரைந்தாயோ
பேராளா! இந்தியாவின் 'பிஸ்மார்க்கே'
பேசிநிதம் துடிக்கவிட்டுப் பிரிந்தாயே!

அதிகார வர்க்கத்தார் அடமடங்கி
அவனிக்காய்ப் பணிசெய்த வைத்தவனே
சதிகார உலகிற்கோர் சாட்டையாய்ச்
சகமறிய அடக்கியாண்ட தவச்செல்வன்
மிதிகார வகுப்புவாத வரிப்புலியை
வீரமாக வீழ்த்திவிட்ட வீரசிங்கம்
விதிகாரப் பிரமனையும் நாணவைக்கும்
விற்பனனாய் உழைத்தமகான் மறைந்
[திட்டானே.

### விசேடகதை

திருத்தவத்துறை என்னும் நகர் இப்போது 'லால்குடி' எனக் குறிப்பிட்டு வழங்கப்படும். இப் பெயர் பல்லவர் வரவால் மாற்றப்பட்டதெனக. இம்மூன்றும் நந்திவர்மபல்லவர் மீது நந்திக் கலம்பகம் பாடப் பெற்றதென்பது கவனிக்கப்படவேண்டியது.

இவனது சரித்திரத்தில் இ. பி. 9-ம் நூற்றாண்டில் ஒரு விசேட கதை இருக்கிறது. திருவாரூர் வீதியை வழிபாடு செய்ய வலம் வரும்போது மனைவி பின்னே தொடர்ந்து சில காட்சிகளை நயந்த வண்ணம் வந்தனள். ஓர் மலர் மேலேயிருந்து தவறி அவள் முன்பு வீழ்ந்தது. அறியாமையால் அதனை அவளெடுத்து மோந்தாள். இது கண்ட ஓர் முனிவர் கோபாவேசம் கொண்டு ஓடிப்போய் அவள் மோந்த மூக்கை அரிந்துகொண்டார். அவள் கதறிய ஒலி கேட்ட அரசன் ஓடிச் சென்றான். நடந்த சம்பவத்தை உசாவி அறிந்தான். சிவனிர்மாலியத்தை அசுசிப் படுத்தியமைக்காக மூக்கு வெட்டினேனெனச் சிவனடியார் கூறியதும் அரசன் அதுகேட்டு "ஐயனே! முதல் குற்றவாளியை விட்டு இரண்டாவது குற்றம்செய்த மூக்கை வெட்டினீர் யான் இதோ முதற் குற்றவாழியைத் தண்டிக்கிறேன்" என்று அவள் கையை அரிவாளாற்றடிந்தான் என்பதுகதை.

இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்வதென்ன வென்றால் அக்காலத்துச் சமயவெறி வலுவுற்றிருந்தது. அரசனே சிவனடியார்கள் கருத்துக்கு முறுகிய சைவ வைதிக ஒழுக்கத்துக்குத் துணையாயிருந்தான் என்பது மற்றும் ஒன்று புலனாகிறது. கடவுளுக்குச் சாத்தும் பூ கையாற்றீண்டாது கொழுவாற் பறித்துக் கூடையில் இட்டுச் செல்வது முறை. நந்திவர்மன் மனைவி சைவநெறியல்லாதவளாதலால் தான் அம் மலரை அறியாமையால் எடுத்து மோந்தாள் என்பதும் புலனாகிறது. ஆராய்ச்சியாக இதனை நுணுகி அறிந்தபோது அவ்வரசி சமண சமயத்தவனான 'அமோகவர்ஷ நிருபதுங்கன்' என்ற அரசனது இரண்டாம் மகளாவாளென

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

தின வரவு இடாப்பு
[ATTENDANCE REGISTER]

இலங்கைத் தமிழ், ஆங்கில பாடசாலைகளிற் பெரிதும் விரும்பி உபயோகிக்கப்பட்டு வரும் எமது சிறந்த **தின வரவு இடாப்புகள்** அச்சாகி வெளிவந்துவிட்டன.

வழமைபோல் உயர்தரமான காகிதத்தில் 50 பெயர்கள் எழுதக்கூடியதாகவும்: வரவு பதியும் பக்கம் ஒவ்வொன்றும் ஐவைந்து பகுதிகளைக் காட்டக் கூடியதாய்த் தெளிவான இரட்டைக் கோடுக ளிடப்பட்டதாகவும்: ஆண் பெண், தகுதி-தகுதியற்ற மாணவர்களின் கூட்டுத் தொகைகளைப் புறம்பாகத் தனித்தனியே பதிவதற்கேற்ற மாதிரியாகவும் வேறும் புதிய திருத்தங்களுடன் விசேஷமான முறையில் அச்சிடப்பட்டுத் தடித்த வசையக்கூடிய அட்டை இடப்பட்டது.

விலை: ரூபாய் 1-50. :: :: தபாற்செலவு வேறு.
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்
விநியோக உரிமை:— சுன்னாகம்: தனலக்ஷுமி புத்தகசாலை

1930

# ஈழகேசரி

சுன்னுகம், கரஹூ மார். உஉ
— காந்தி ஆண்டு 83 —
பேசுந் தந்தி இல. 805

## சிக்கலான வருடம்

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்களாகியும் இன்னும் உண்மையான சமாதானத்தை உலகம் கண்டிலது. கொந்தளிப்பும் மனச்சஞ்சலமும் யாவரையும் வருத்திக்கொண்டே வருகின்றன. பொருள்களின் விலையோ குறைந்தபாடில்லை. உணவுக் கஷ்டமோ நீங்குவதாகக் காணேம். இதற்கிடையில் அடுத்த மூன்ருவது யுத்தம் எப்பொழுது ஆரம்பிக்குமென்ற பேச்சும் இடைவிடாது எழுகின்றது. வல்லரசினர் மறுபடி யுத்த ஆயத்தங்களில் நெருங்கி முயல்கின்றனர். இந்நிலையில் உலகப் பொதுமக்கள் அடையும் கலக்கம் எவ்வளவாகுமென நாம் விபரமாக எடுத்துக் கூறவேண்டியதில்லை. உலகம் இப்போது இரு பெரிய கோஷ்டியாகப்பிரிந்துவிட்டது. முதலாளிவர்க்கத்தைச்சேர்ந்த நாடுகள் அமெரிக்காவின் தலைமையிற் சனநாயக அரசியலை நிலைநாட்டவேண்டுமென்று பறைசாற்றி இறுமாப்புடன் நிற்கின்றன. அபேதவாதிகளாகும் கொம்யூனிஸ்ட் கட்சியினர் ருஷியாவின் தலைமையில் முதலாளி வர்க்கத்தினரை மட்டந்தட்டிவிட முயல்கின்றனர்.

இந்நிலையில் உலகில் நிரந்தர சமாதானம் ஏற்படுவது எங்ஙனம்? தத்தங் கொள்கைகளை எப்படியாவது நாட்டிச் செல்லவேண்டும், உலகில் தமக்கே முதலிடம் கிடைக்கவேண்டுமென்ற போட்டியே இந்தப் பயங்கர நிலைக்குக் காரணங்களாகும். உண்மைக்கும் அஹிம்சைக்கும் இப்போதைய சூழ்நிலையில் இடம் உண்டென நாம் நம்பவில்லை. பலாத்காரத்தால் தாம் நினைத்ததை நிறைவேற்றப் பார்க்கின்றனர் ஒரு சாரார். பொய்யிற் புதைந்துள்ள இராஜதந்திரங்களால் உலகத்தை ஏமாற்றித் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டப் பார்க்கின்றனர் இன்னெரு சாரார். அதிகாரவிருப்பும் ஆக்கிரமிப்பும் வல்லரசுகளிடையே நிலைபெறும்வரையும் உலகில் ஏற்பட்டுள்ள பெரிய கலக்கம் என்றும் நீங்கப்போவதில்லை. எனவே பெரிய ஆபத்தோடு கூடிய எதிர்காலத்தை எப்படிச் சமாளிப்பதென்பதுதான்கேள்வி. உலக சமாதானத்தை இலக்காகக்கொண்ட வல்லரசினர் ஒற்றுமையடைந்து பரஸ்பரம் நம்பிக்கையும் நட்பும் மேற்கொள்வதற்குப் பதிலாகத் துவேஷமும் போட்டியும், அவநம்பிக்கையும் உடையராய் ஒவ்வாத வழியிற் செல்வதைக் கண்டுகொண்டிருக்கிருேம்.

இந்தத் தறுவாயில் பிரதம மந்திரி சேர்ச்சில் துரையவர்கள் ஏதோவொரு பெரிய கைங்கரியத்தை உட்கொண்டு அமெரிக்கா செல்கின்றனர். ருஷியாவுக்கும் அமெரிக்காவுக்கு மிடையில் ஏற்பட்ட வேற்றுமைகளைச் சமரசப் பேச்சுகளால் அகற்றிப் பழையபடி நல்லிணக்கத்தை நாட்டவே இவர் கருதிச் செல்கின்றனரென்பது சிலருடைய அபிப்பிராயம். அப்படியன்று, அமெரிக்காவுடன் இறுகிய இணக்கமடைந்து ருஷியரின் ஆதிக்கத்தை ஒழிக்க வழி காணச் செல்கின்ருர் என்பது வேறுசிலர் அபிப்பிராயம். எப்படியாயினும் சேர்ச்சில் அவர்களின் யாத்திரையால் பெரிய விஷயங்கள் முடிவுசெய்யப்படுவது நிச்சயம். ஆனால் ஒரு விஷயத்தை மாத்திரம் நாம் திடமாகக் கூறலாம். உண்மையை முற்ருகக் கைவிட்டு, உபாயங்களையும் இராஜதந்திரங்களையும் மேற்கொண்டு, தமது ஆயுதபலத்தில் இறுமாப்படைந்து, பலாத்கார வழிகளைக் கைக்கொள்ளும் வரையும் உலகிற் சமாதானம் நிலைபெறப் போவதில்லை. உலகம் உய்வடையப் போவதுமில்லை. எனவே, இப்புதிய வருடம் எத்தனையோ புதிய பிரச்சினைகளை மாற்றங்களைக் கொண்டுவரப் போகின்றதென்றே கூறவேண்டும். ஆனல் சமாதானம் வேண்டுமென்ற உயரிய மனப்பான்மையுடன் வல்லரசினர் நீதியோடு நடக்க ஒருப்படின் சமாதானத்தை நாட்டுவது கஷ்டமன்று.

---

## சங்கீதத்துக்கு ஆபத்து!

இந்திய நாகரிகத்தின் சிறந்த அம்சங்களாகிய இசை, நாட்டியம், சிற்பம் என்ற கலைகளை எக்காலத்திலும் தளரவிடாது போற்றி வளர்த்த பெருமை தமிழகத்துக்கே உரியதாகுமெனத் தமிழ்ப்பேரறிஞர் சு. நடேசபிள்ளை அவர்கள் சென்னைத் தமிழ் இசை மகாநாட்டைத் திறந்து வைத்து விரிவுரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார்கள். தமிழகத்தின் அழியாப் பெருமைகளை உலகறியச் செய்துவரும் இக்கலைகளின் உயர்வை ஆதாரங்களுடன் விளக்கிய திரு. நடேசபிள்ளை அவர்கள் இப்போது சில காலமாகக் கருநாடக சங்கீதத்துக்கு ஏற்பட்டுவரும் ஆபத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்கள். சினிமா என்கிற நவீன நாடகத்துறையில் தமிழ் மொழிக்குப் பொருந்தாதவகையில் ஹிந்துஸ்தானி மெட்டுகள் புகுத்தப்படுவதினல் தமிழ் மக்களின் சங்கீத உணர்ச்சி நாளடைவிற் கெட்டுப்போகுமென அவர்கள் அச்சமுறுகின்ருர்கள். இத்தனைக்கும் திரு. நடேசபிள்ளை அவர்கள் ஹிந்துஸ்தானி சங்கீதத்தை இழித்துக் கூறவில்லை. வேற்று நாடுகளில் இழிசனர் உவக்கும் கூக்குரல்களும் தமிழ்ப்படங்களிற் சங்கீதமாகப்படுவதைக் கண்டே அவர்கள் கவலையுறுகின்ருர்கள். தமிழ்ப்பட முதலாளிகள் இக் குறைபாட்டை உணராதிருக்கவில்லை. வெகுசன விருப்பை நிறைவேற்றிப் போதிய பணஞ் சேகரிப்பதற்காகவே அவர்கள் பொதுமக்களுக்குப் பின்னல் இழுபடுகின்றனர். பொதுமக்களைத் தங்கள் பக்கத்துக்கு இழுத்துச் சங்கீத உணர்ச்சியைப் பாதுகாக்க வேண்டுமென அவர்கள் திடசங்கற்பம் செய்வாராயின், தமிழ்நாட்டின் சங்கீதப் பெருமையைப் பாதித்து நிற்கும் பேராபத்து நீங்கிவிட இடமுண்டு. அத்துடன் வானெலி நிலையங்களும் இழிசனர் உவக்கும் கூக்குரல்களை ஒலிபரப்பாது விடுமாயின் மக்களின் சங்கீத உணர்ச்சி செம்மையுறுவதுடன் கலையுலகும் நற்பயன் அடையுமென்பதற்கு ஐயமில்லை. இப்பணியிற் கலாரசிகர்களாகிய பத்திரிகாசிரியர்களையும் பட முதலாளிகளையும் ஒத்துழைக்குமாறு திரு நடேசபிள்ளை அவர்கள் விண்ணப்பித்திருப்பதை வானெலி நிலையங்களும் கவனிக்குமென நம்புகின்ருேம்.

## பத்திரிகை உலகத்தில்

பாட்டையாரி

இந்து ஆலயச் சொத்துப் பரிபாலனச் சட்டம் ஏற்படுவதைச் சுயநலப் புலிகளான ஒரு சில கோயில் முதலாளிமார் விரும்புவதாயில்லை. இவர்களின் இரும்புக் கரங்களுக்குள் அகப்பட்டு இடர்ப்படும் கோயிற் பூசகர்களின் பரிதாப நிலையை நன்கு உணர்ந்துள்ள பிரமஸ்ரீ சுகராஜ ஐயர் அவர்கள் தமது பிராமணச் சகோதரர்களுக்கு விடுத்துள்ள விண்ணப்பம் அவர்களை உறக்கத்தினின்றும் விழிக்கச் செய்கின்றது. ஆலயப் பூசகர்களுக்குச் சம்பளத்திட்டம் அவசியமென ஈழகேசரி அரசினருக்கு எடுத்துரைத்துத் தங்கள் கட்சியை ஆதரித்து நிற்குமாறு பிராமணப் பிரமுகர்கள் பலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். இப் பூசகர்களின் நியாயமான கோரிக்கையைக் கொம்யூனிஸ்டுகள் கூட ஆதரித்து நிற்பார்கள். ஏனெனில் அவ்வளவு கேவலமாகக் கோயிற் பூசாரிமாரைக் கோயில் முதலாளிமார் குறையிரக்கச் செய்து வருகின்றனர்.

பொது மக்களின் பணத்தைப் பெற்றுப் பூலோகத்திலேயே கைலாயத்திலுள்ள சகல சௌகரியங்களையும் அனுபவித்துவருங் கோயில் முதலாளிமார் பூசகர்களின் நல்வாழ்வுக்கு உலைவையாமல் இருக்கவேண்டுமென இப்போதே உரிமையுடன் எச்சரிக்கவேண்டியிருக்கின்றது.

❖

### சரியான பாடம்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கோயில் முதலாளி ஒருவருக்கு ஆலயப்பாதுகாப்புச் சட்டம் ஒரே பீதியை ஏற்படுத்தியிருக்கின்றது. இவர் மந்திரி ஒருவரிடம் சென்று தெண்டனிட்டார் எனத் தெரிகின்றது. மந்திரியார் என்ன செய்ய முடியும்? 'காரியம் இறுகிவிட்டது' என்று சொல்லிக் கையை விரித்தாராம். கோயில் முதலாளியாரைப் பொறுத்தவரையில் அவருக்கு இது ஒரு சரியான பாடம். ஆனல் மந்திரியாருக்கோ இது மற்ருெரு சூடு.

❖

### இளம் எழுத்தாளர்கள்

பழைய நாளிற் பிரபல சங்கீத வித்துவான்கள் கீழ்க் கிளைகளை உற்சாகப்படுத்தி முன்னேறச் செய்ததுபோலவே பத்திரிகை ஆசிரியர்களும் இளம் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தவேண்டும். சென்னைச் சங்கீத வித்துவ சபை மகாநாட்டுக்குத் தலைமை வகித்த செம்பை பாகவதர் அவர்கள் பேசும்போது பிரபலமடைந்த சங்கீத வித்வான்கள் புதிதாக முன்னுக்குவரும் இளம் வித்துவான்களை உற்சாகப்படுத்தவேண்டும் எனத் தெரிவித்தார். ஒரு சில பத்திரிகை ஆசிரியர்கள் இளம் எழுத்தாளர்களை எள்ளி நகையாடுவதுடன் அவர்களுக்குக் கலையும் தெரியாது, இலக்கியமுந் தெரியாது என்று சொல்லி அவர்களின் தலையிலே கல்லைத் தூக்கிப்போட்டுவிடுகின்றனர். இதைப் பொறுத்துக்கொண்டு முன்னேறியுள்ள எழுத்தாளர்கள் பலர் இவ்வுலகில் இருக்கின்றனர்.

நிற்க, தமிழ் எழுத்தாளர்களுக்குச்சங்கம்அமைப்பதில் ஒருசில அரசாங்க ஊழியர்கள் கொழும்பிலே முனைந்து நிற்கின்றனர். ஏதோ அடிப்படையான நோக்கத்தை முன்னிட்டுக் குறித்த அரசாங்க ஊழியர்கள் கொம்பாலே மண்ணெடுக்கின்றனர் எனத் தெரிகின்றது.

❖

### தேர்தல் வெண்பா

தேர்தல் காலத்தில் வெளியாகும் சில பிரசுரங்கள் இலக்கியத்தையும் வளம் செய்து வருகின்றன. இந்தியப் பாராளுமன்றம் மதுரைத் தொகுதி அபேட்சகர்களில் ஒருவரான திரு. கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்கள் தமது தேர்தல்விளக்கத்தை வெண்பாவுடன் ஆரம்பித்துள்ளார். அது இது:

"பாராளு மன்றில்
பணிபுரியும் நன்னேக்கம்
சீராகச் செங்கோல்
செலப்புரிந்து—யார்யாரும்
உண்டி உறையுள்
உடைஅறிவுச் செல்வமெ
கொண்டினிது வாழும் [லாம்
குறிப்பு"

---

### தலைசிறந்தகலா இரசிகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களே. இது ஒருகாலம் பாட புத்தகமாக இருந்த காரணத்தால் இதில் மூன்று பதிப்புக்கள் வெளிவந்தன.

ஆசிரியர்களின் விடுதலைக்காக எத்தனையோ பல கட்டுரைகள் அழகான செந்தமிழில் - ஆர்வமான செம்மொழிகளில்—அரிய உவமை நயங்களுடன் பல பல பத்திரிகைகளுக்கும் வழங்கியுள்ளார். இவரது கட்டுரைகளைத் தொகுத்தால் 'ஆசிரியரின் விடுதலை' யென்னும் பாரியதோர் நூலாகும்.

அரசாங்கத்தில் அடிக்கடி விவாதங்களில் வரும் எத்தனையோ விடயங்களுக்குச் சாட்சியம் பகருவோருள் இவரும் ஒருவராக விளங்கினர். இவருடைய பேச்சிலும் எழுத்திலும் ஒரு கலையுணர்ச்சியுண்டு. ஆங்கில மொழியைச் சபைகளிலே மொழிபெயர்த்துச் செந்தமிழிற் சொல்வதில் யாழ்ப்பாணத்தில் இவரே தலைசிறந்தவரென்று சொன்னல் அது மிகையாகாது. இவரொரு குழந்தை யுள்ளம் படைத்த கலா இரசிகர்.

### சனசமூக சேவாசங்கம்

**புன்னலைக்கட்டுவன் வடக்கு**

இச்சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 30-12-51 ஞாயிற்றுக்கிழமை இரவு புன்னலைக்கட்டுவன் வடக்கு அ. மி. தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் திரு. தா. வயித்திலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரு. தா. வயித்திலிங்கம் அவர்களும், திரு. சி. வயித்திலிங்கம் அவர்களும் விரிவுரை யாற்றினர். திரு. அ. அம்பலவாணர், திரு. சீ. அப்பாத்துரை ஆகியோர் குறிப்புரை கூறினர். சங்கத்துக்கு வாசிகசாலை நிறுவுவதற்கு நிலம் கொடுத்துதவத் திரு. எஸ். பராசசிங்கம் (கிராம விதானை) அவர்கள் முன்வந்தார்கள்.

### மயிலிட்டிதெற்கு (குரும்பசிட்டி) ஐக்கிய நாணய சங்கம்

மயிலிட்டி தெற்கு (குரும்பசிட்டி) ஐக்கிய நாணய சங்கத்தின் (J 64.ம் இலக்கம்) விசேஷ பொதுக்கூட்டமொன்று 28-12-51 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் தலைவர் திரு. மு. கந்தையா அவர்கள்தலைமையில் நடந்தேறியது. இப்பகுதி ஐக்கிய சங்கப்பரிசோதகர் திரு. ரி. வி. சுப்பிரமணியமவர்கள் சமுகமளித்தனர். அவ்வமயம் ஷெ ஐக்கியசங்கம் B வகுப்பிலிருந்து A வகுப்புக்கு உயர்த்தப்பட்டமை குறித்துப் பலர் பாராட்டிப் பேசினர்.

காரியதரிசி திரு. சி. தம்பிப்பிள்ளையவர்கள், ஷெ சங்கம் காலஞ்சென்ற குரும்பசிட்டி திரு. எஸ். ஆர். முத்துக்குமாரு, திரு. நா. பொன்னையா ஜே. பி. அவர்களின் முயற்சியால் 1934-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, ஆரம்பத்திலேயே B வகுப்பிலேயே பதியப்பட்டதென்பதையும், 5 வருடகாலம் செவ்வனே நடந்தேறி கடன் எடுக்கும் அங்கத்தவர்களின் நோக்கத்தின் தப்பிதத்தாற் சீர்குலைந்து, C வகுப்பிற்குக் குறைக்கப்பட்டுக் குலைக்கப்படவேண்டிய சங்கங்களுள் ஒன்ருனமையையும், பின் 1940-ம் ஆண்டில் தற்போதைய சில அங்கத்தவர்களின் முயற்சியால் புனருத்தாரணஞ் செய்யப்பட்டுச் சரியானமுறையில் நடந்தேறியும், நற்சிபார்சுகள் பெற்றும் ஐக்கிய பகுதியினரின் யுத்தகாலப் பராமுகத்தின் காரணமாக 8 வருடகாலம் C வகுப்பிலேயே நடந்தேறி 1949-ம் ஆண்டு ஆரம்பத்திலேயே B பிரிவுக்கு உயர்த்தப்பட்டமையையும், சில மாதங்களுக்கு முன்பு ஐக்கியபகுதிப் பதில் பதிவுகாரியஸ்தர் திரு. எஸ். பி. யற்றவரா அவர்கள் ஷெ சங்கத்தைப் பார்வையிட்டு நன்கு பாராட்டியதன் காரணமாக 17-12-51ல் A வகுப்பிற்கு உயர்த்தப்பட்டமையையும் தொகுத்துக் கூறினர்.

தனதிகாரி திரு. தா. மகேந்திரம் அவர்கள் ஐக்கியசங்கப் பரிசோதகர் திரு. ரி. வி. சுப்பிரமணியமவர்கள் இச் சங்கத்தின் தகைமையை உயர்த்துவதில் ஆர்வங்காட்டித் தமது கடமைகளைப் பரஸ்பர ஒத்துழைப்புமூலம் எவ்வாறு பணியாற்றலாமென்பதை நிரூபித்தனர் என்றும், அதனல் இச் சங்கம் பெற்றுள்ள மகிமை அவர்களுக்கே உரியதென்றும் பாராட்டிப் பேசினர்.

பண்டிதர் திரு. வ. நடராஜா அவர்கள் மனிதவாழ்வின் சகடயோகத்திற்கும் இச் சங்க வரலாற்றிற்கும் உள்ள ஒற்றுமையை விளக்கி, தாழ்விலும் வாழ்விலும் நாம் செயற்பாலனவற்றைக் குறிப்பிட்டு, எங்கள் மத்தியிலிருந்து மாற்றங்காரணமாகப் புங்குடுதீவுக்குச் செல்லவிருக்கும் பரிசோதகர்அவர்களின் செயற்றிறனைப் போற்றினர்.

சங்கப் பரிசோதகர் திரு. ரி. வி. சுப்பிரமணியமவர்கள் இச்சங்கம் வருங்காலத்தில் எவ்வாறு நடைபெறல் வேண்டும், தம் தகைமையைப் பேணிக்கொள்வதற்குச் செயற்பாலன யாவையென்று விளக்கிக் கூட்டமுடிவில் தாமே தேவாரபாராயணஞ் செய்து யாபேரையும் மகிழ்வித்தனர்.

ஐக்கிய சங்க நண்பர்களுக்கு இவ்வறிக்கை மகிழ்ச்சியையும், ஆர்வத்தையும் புத்துணர்ச்சியையும் அளிக்குமென்ற நம்பிக்கையினல் இது வெளியிடப்படலாயிற்று.

---

### அச்செழுசனசமூகசேவாசங்கம்

அச்செழு சனசமூக நிலயத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா 21-12-51 வெள்ளிக்கிழமை மாலை புத்தூர் கிராமச்சங்கத்தலைவர் திரு. எஸ். சதாசிவம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரு. த. காசிநாதர் அவர்களும், ஆசிரியர் திரு. ஜே. வீ. சரவணமுத்து அவர்களும் விரிவுரைகள் ஆற்றினர்.

# காங்கிரஸ் அபிமானம் மக்களிடம் வலுப்பெறுகிறது

## இந்தியா

இந்தியாவில் தேர்தல் அமளி சொல்லுந்தரமன்று. பல்வேறு கட்சியினரும் வெற்றி பெற்றுவிட வேண்டுமென்று மிக்க ஊக்கத்துடன் முயற்சி செய்கின்றனர். பிரதமர் நேரு அவர்கள் எல்லா மாகாணங்கட்கும் சமஸ்தானங்கட்கும் சென்று காங்கிரஸ் சார்பாகத் தேர்தல் பிரசாரஞ் செய்துவருகின்றனர். நீடித்துப் பெரிய தியாகங்கள் செய்து அரிய தொண்டாற்றிய கட்சி காங்கிரசேயாகும், எத்தனையோ சோதனைகளில் மக்கட்கு மிக்க ஆதரவாக நின்று உழைத்தகட்சியும் இதுவே. மேலும் நிரந்தரமான ஏற்ற கொள்கைகளை யுடையதாய் உண்மையையும் அஹிம்சையையும்மேற்கொண்டு செல்லும் கட்சியும் காங்கிரஸ் கட்சியேயாகும்; காந்திஜி காட்டிய வழிகளை முற்றாக அங்கீகரித்து அவைகளை அடிப்படையாகக் கொண்ட இக்கட்சியை எப்படிப் பொதுமக்கள் இலகுவில் உதவாதெனப் புறத்தே விடவியலும். என்றாலும் சுதந்திரம் பெற்றபின் காங்கிரஸ் வாதிகள் சிறிது தமது நிலையிலிருந்து நழுவிவிட்டனர். அதன் காரணமாக இக்கட்சியின் பெலம் சிறிதுகுன்றியது. இதைக்காரணமாகக் கொண்டு வேறுகட்சிகள் முதன்மை யடையலாமென்று பகீரதப் பிரயத்தனங்கள் செய்கின்றன.

### ஹிமாலயப் பிரதேசம்

இப்போது முதலாவதாகத் தேர்தல் ஒரு மாகாணத்திற்றான் முடிவடைந்தது; அவ்விடம் ஹிமாலயப் பிரதேசம் எனப்படும். அங்கு தெரியப்பட்ட அங்கத்தவர்கள் தொகை 36 பேராவர். அவர்களுள் 24 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். மிகுதியானவர்கள் பல்வேறு கட்சியினைச் சேர்ந்தவர்கள். இந்திய அரசாங்கத்தின் சுகாதார மந்திரியாகக் கடமையாற்றிவரும் இராஜகுமாரி அமிர்த கௌரியும் இம்மாகாணத்தையே சேர்ந்தவர். இவர் தேர்தலில் வெற்றியடைந்தது விசேஷமாகக் கூறப்படவேண்டியதொன்று. மந்திரிகளில் முதன் முதலாக வெற்றியடைந்தவர் இவரேயாவர். திருவாங்கூர் கொச்சின் பிரதேசத்திலும் தேர்தல் மும்முரமாக நடக்கின்றது. அங்கே காங்கிரஸ்தான் வெற்றி யடையுமென்பதற்கு ஐயமில்லை. என்றாலும் இடதுசாரிக் கட்சியினர்க்கு அங்கு மிக்க ஆதரவுண்டென்றே சொல்லவேண்டும். இச்சமஸ்தானத்திற் கொம்யுனிஸ்ட் கட்சிகளுக்கும் மிக்க நடப்புண்டு. இத்துடன் மத்தியப் பிரதேசம், ஹைதராபாத், ஒறிஸா, அஸாம் மாகாணங்களிலும் தேர்தல்கள் அமளியாக நடக்கின்றன. முடிவுகள் விரைவில் அறியவரும். சென்னை பம்பாய் மாகாணங்களிலும்தேர்தல்கள் ஆரம்பமாகி நடக்கின்றன. இவை பூரணமடையப் பதினைந்து தினங்கள் பிடிக்கும்.

### காஷ்மீர் கஷ்டம்

காஷ்மீர் விஷயம் முடிவு செய்வது வரவரக் கஷ்டமாகவேயிருக்கின்றது. காஷ்மீர் வாசிகள் பெரும்பான்மையோர் ஸ்லாமியராகையால் பாகிஸ்தானுடன் சேர விரும்புவாரென எண்ணுவது சிறிதும் பொருந்தாது. தமது பொருளாதார உறுதிப் பாட்டினையே காஷ்மீர் மக்கள் பெரிதாகக் கருதுகின்றனர். இந்தியாவுடன் சேர்ந்திருத்தாற்றான் நிலையான நன்மையுண்டென்பது இந்நாட்டினரின் நம்பிக்கை. அன்றியும் இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களும் இந்துக்களும் மிக ஒற்றுமையாக வாழ்கின்றனர். பாகிஸ்தானுடன் இச்சமஸ்தானம் சேர்க்கப்படுமாயின், இந்துக்கள் ஓட்டம் பிடிக்கவேண்டியதுதான். சனசம்மதம் அறிதற்கு இப்போது தடையாக நிற்பது ஒரேயொரு பிரச்சனை. அதாவது சேனைகளை அங்கு நிற்பாட்டல். இந்திய வரசினர் தேர்தல் நடத்தப்படும் போது பாதுகாப்புக்காக 25000 போர் வீரரை எல்லைப் பிரதேசத்தில் நிற்பாட்டுவது அவசியமென்கின்றனர். பாகிஸ்தான் அரசினர் தாமும் அப்படிச் செய்யவேண்டுமாம். ஆக்கிரமித்துப் படையெடுத்துக் காஷ்மீர் சமஸ்மானத்தில் நுழைந்து விட்டுத் தமக்கும் அங்கு உரிமை உண்டெனப் பாகிஸ்தான் விவாதிப்பது நூதனமாகின்றது.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம் இல. 6661

வெள்ளவத்தை 4-ம் ஒழுங்கை, இலக்கம் 28, ஓங்காரவடிவேல் வையாபுரி சண்டிருப்பாய் காலஞ்சென்ற சேதுபதி அம்மாளின் ஆஸ்திக்குக் கொழும்பு டிஸ்திறிக்கோட்டில் 1335-ம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவகாரனுகவும்
வழக்காளி

யாழ்ப்பாணம் சண்டிருப்பாய்
**வேலாயுதர் காசிப்பிள்ளை
கைம்பெண் நாகம்மா**
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6661-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகள் 1952-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 30-ந் திகதி (30-1-52) புதன் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**-முதல் வட்டி ரூபாய் 1500/-ம் இதில் ரூபாய் 1500/-க்கு 1-6-44 திகதி தொடக்கம் 13-2-51 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 361–60 சதம். இதில் ரூபாய் 2452–37 சதம் கோட்டில் கட்டப்பட்டது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று சண்டிருப்பாயிறை "அலுனி" கிலேப்பரப்பு (4-ம்) இன்னும் கிலேப்பரப்பு (3-ம்) சேர்ந்த கிலேப்பரப்பு ஏழு (7-ம்) வீடும் மற்றும் கட்டிடங்களும் கிணற்றுப்பங்கும் மற்றும் பயிர்களும். எல்லை: கிழக்கும் வடக்கும் சுப்பிரமாணிக்கர் இராசசூரியரின் ஆதனம். மேற்கு, பொன்னம்பலம் பெண் சின்னாச்சியின் ஆதனமும் கீழே குறிக்கப்படும் 2-ம் ஆதனமும் கை ஒழுங்கை முகப்பும். தெற்கு, வேதவனம் சுப்பிரமணியத்தின் ஆதனம். இதடங்கலும்.

முற்பதிவு $E \frac{207}{100}$.

2. மேற்படி சண்டிருப்பாயிறை "பெரிய தோட்டம்" கிலேப்பரப்பு இரண்டு (2-ம்) பயிர்களும் பனைகளும் கிணற்றுப் பங்கும எல்லை: கிழக்கு, முதலாம் ஆதனம், வடக்கு, பொன்னம்பலம் பெண் தங்கமுத்துவின் ஆதனம். மேற்கும் தெற்கும் ஒழுங்கை இதடங்கலும்.

முற்பதிவு $E \frac{222}{6}$

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை
11–12–1951 [4501]

---

## குரும்பசிட்டி சன்மார்க்க சபை 17-வது ஆண்டு விழா

மனிதனின்வாழ்க்கை சமய அடிப்படையில் அமையவேண்டிய அவசியத்தையும் அங்ஙனமின்றி கொம்மியூனிசம் வாழ்க்கையில் இடம்பெறுமாயின் உலகம் தக்கவழியிற்செல்லாது எனவும் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 17-வது ஆண்டு விழாவுக்குச் சுகாதார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. வி. நல்லையா அவர்கள் தலைமை வகித்துக் கூறும்போது குறிப்பிட்டார். அத்துடன் சன்மார்க்கநெறி அமைந்த வாழ்க்கையின் அவசியத்தையும் வற்புறுத்தியிருந்தார்.

இக்கூட்டம் 29–12–51 சனிக்கிழமைமாலை 6–30 மணிக்குச் சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெற்றது. சன்மார்க்க சபைத் தலைவர் திரு. மா. சின்னப்பு அவர்கள் தமது வரவேற்புரையிற் காலஞ்சென்ற திரு. நா. பொன்னையா ஜே. பி. அவர்களின் சேவை நலத்தையும் அவரின் சேவையை முன்மாதிரியாகக்கொண்டு இளைஞர்கள் சேவைபுரிய முற்படவேண்டிய அவசியத்தையும் அன்னார் ஆரம்பித்து வைத்த வேலைகளை முற்றுப் பெறுவித்தலே அவருக்கு நாம் புரியக்கூடிய நன்றியறிதலாகும் என்பதையும் விளக்கி உரைத்து திரு. வி. நல்லையா எம். பி., முதலியார் செ. சின்னத்தம்பி, பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை, திரு. கோ. இராஜகோபால் முதலிய பிரசாரகர்களையும் சபையினரையும் வரவேற்றுப்பேசினார்.

முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் 'நாம் செய்யவேண்டியன' என்னும் பொருளில் சமயத்துறையில் நாம் செய்ய வேண்டியவற்றைத் தமது இனிய நடையில் விளக்கிக் கூறினார். சாதிக்கொடுமை சைவசமயத்தினின்று விடுதலை பெறவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினார். பல மேற்கோள்கள்மூலம் தமது நியாயத்தை நிரூபித்தார்.

பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளை அவர்கள் 'திருவாசகம்' என்னும் பொருளிற் பேசும் போது கல்லைக் கனிவித்து அதன்மேல் மணிவாசகர் தம் மனத்தைக் கனிவித்த தன்மையை விளக்கி உரைத்தார். திருவெம்பாவை நிகழவிருக்கும் இக்காலத்துத் 'திருவாசகம்' என்னும் பொருளில் தாம் பேசுவது குறித்து மகிழ்வதாகவும் தெரிவித்தார்.

திரு. கோ. இராஜகோபால் அவர்கள் பாரதியாரின் பாடல்களில் உதாரணம்காட்டிச்சமூக முன்னேற்றத்துக்கு அவசியம் தேவையானவற்றை எடுத்துக் கூறினார்.

---

## கோட்டுவிற்பனவு விளம்பரம் இல 7383.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கொழும்பு கவலொக் ரவுண் பைவ் ரோட் இல. 30
**தம்பையா தியாகராசா**
வழக்காளி

மானிப்பாய் தெற்கு
1. **தம்பையா நடராஜா**
கொழும்பு கொற்றகேனு வடக்கு ஸ்கின்னேஸ் ரோட் இல. 297/5
2. **தம்பையா குமாரசுவாமி**
மேற்படி
3. **தம்பையா கந்தசாமி**
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7383-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனத்தை 1952-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 9-ம் திகதி (9-2-52) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று முதலாவது காணிப் பங்காளருக்கிடையில் மதிப்புத் தொகையிலிருந்தும் அவர்கள் கேட்கத்தவறின் உடனே பிரசித்த ஏலத்திலும் அதியுயர்ந்த கேள்விக்காரனுக்கு விற்கப்படும்.


### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று ஆனைக்கோட்டை யிறை "குழத்தையர் முற்றமும் யாமங் தாழ்வும்" கிலேப்பரப்பு 20-ம் குளி 3¾-ம், ஆனால் அளவின்படி கிலேப்பரப்பு 15-ம் குளி 7-ம் வீடும் மற்றும் கட்டிடங்களும் கிணறும் பயிர்களும். எல்லை: கிழக்கு, தம்பையா தியாகராசாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு ஏ. செல்லையாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். மேற்கு, ரோட்டு. தெற்கு, தருமசாதன ஆதனமும் கார்த்திகேசு முருகேசுவின் ஆதனமும். இதடங்கலும். இது உலாந்தா எஸ். முத்துக்குமாரசுவாமியால் 1951-ம் ஆண்டு மாசி மாதம் 24-ம் திகதி $\frac{9}{1951}$-ம் இலக்கப்படத்தில் விந்தாரிக்கப்பட்டு இவ்வழக்கில் அணைக்கப்பட்டிருக்கிறது.

பெறுமதி விலை ரூபா 15000.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை,
17–12–1951 [4499]

---




## தமிழின் தலைவிதி என்ன புத்தாண்டே நீ பதில் சொல்

4–1–'52

புதுவருடம் பிறந்துவிட்டது. வழக்கம்போலப் புதுவருடத் தீர்மானங்களும் பல உண்டு. இலங்கை சுதந்திரமடைந்து முன்னேறிச் செல்வது உண்மைதான். ஆனால் பிரதமரும் பண்டாரநாயகாவும் கதிர்காமத்துக்கு யாத்திரை செய்ததைவிட்டுப் பலவித ஜோஸ்யம் கூறப்படுகிறது. கதிர்காமக் கந்தனையே திணற அடிக்கிறார்கள் அரசியல் வாதிகள். சர்வஜன வாக்குரிமை இலங்கைக்கு ஏற்பட்டு 21 வருடங்களாகின்றன என்பது உண்மைதான். என்றாலும் எத்தனை பேர் அந்த வாக்குரிமையைச் செவ்விய முறையில் உபயோகிக்கின்றனர் என்பது கேள்விக்கிடமானது. அடுத்த தேர்தலும் நெருங்கி வரவரக் கட்சிகளின் பிரசாரமும் மும்முரமாகிவருகிறது. இதற்கிடையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, சமஷ்டிவாதிகள் பாடு என்னவாகும். சிங்களமும் தமிழும் அரசாங்க பாஷையானால் கிழ்மாகாணமும் வடமாகணமும் நாங்கள் கேளாமலே பிரிக்கப்பட்டு விடாதா என்று சிலர் பயப்படுகின்றனர். அரசாங்க பாஷை விசாரணைச் சபையின் கொள்கையும் சரியாகப் புலப்படவில்லை. கல்விக் கொள்கையிலும் தெளிவான திட்டத்தைக் காணவில்லை. 1955-ம் ஆண்டு எட்டாம் வகுப்புப் பாடங்கள் தமிழிலும் சிங்களத்திலும் நடைபெறும் எனக் கல்வி மந்திரி அறிக்கை விடுத்துள்ளார். மிகவும் நல்லது. அதன்பின்பு என்ன செய்வது? எஸ். எஸ். ஸி. வகுப்பு ஆங்கிலத்தில் நடைபெறுமா தமிழில் நடைபெறுமா? அதன்பின்பு சர்வகலாசாலையில் தேசிய பாஷையிலேயே கல்வியூட்டப்படுமா? ஆங்கில எஸ். எஸ். ஸி. பரீட்சை நின்றுவிடுமா? லண்டன் பரீட்சைகள் நின்றுவிடுமா? இப்பொழுது காலியான இடங்களுக்குக் கோரப்படும் விண்ணப்ப விளம்பரங்களில் விண்ணப்பதாரிகள் ஆங்கிலப்பட்டதாரிகளாக இருக்கவேண்டுமென்றே காணப்படுகின்றது. பண்டிதப் பட்டம் பெற்றவர்களுக்கு இடமேயில்லை. அப்படியானால் தமிழும் சிங்களமும் எப்போது அரசாங்க பாஷையாகும். இந்தியாவைப் போல ஒரு நீண்டகாலத்திட்டம் இதுவரை இலங்கையில் வகுக்கப்படவில்லை. எல்லாத்திட்டங்களும் சேர்ந்து ஒரு சாம்பாராகவே காட்சியளிக்கின்றது. இவற்றுள் தமிழின் தலைவிதி எவ்வாறோ யாரறிவார். புதிய ஆண்டுதான் பதில் சொல்லவேண்டும்.

### புதுவருடப் பட்டங்கள்

புத்தாண்டில் இருவர் ஸேர் பட்டம் பெற்றுள்ளனர். லண்டனில் இலங்கையில் உதவி உயர்தா பிரதிநிதியான திரு. வேலுப்பிள்ளை குமாரசுவாமியும், நீதிமந்திரி டக்டர். எல். ஏ. இராஜபக்ஷ அவர்களும் 'நைற் பச்சிலர்' எனும் கௌரவப் பட்டம் பெறுகின்றனர். நீதியரசர் ஈ. எவ். என். கிரேஷியன் அவர்களும், டபின்பு. ஏ. ஈ. கருணாரத்ன அவர்களும் ஸி. எம். ஜி. பட்டம் பெறுகின்றனர். திரு. எம். எம். இப்றாஹிம் ஆர். சிவகுருநாதர், வி. வீரசிங்கம் ஆதியோர் எம். பி. ஈ. (சிவில்) பட்டம் பெறுகின்றனர். தமிழர்கள் போதியளவு கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றே சொல்லலாம்.

---


வித்தியாசாலைகளுக்குரிய
**புத்தகங்கள், கொப்பிகள், மற்றும் உபகரணங்கள்**
விற்பனைக்கிருக்கின்றன.

உயர்தரமான [English Make] கொப்பிகள்; எல்லா வகுப்புகளுக்கு முரிய சகல தமிழ், ஆங்கில புத்தகங்கள்; கடதாசி, பேனா, மை முதலியவைகள் பெற்றுக்கொள்ளலாம்.

சனி, ஞாயிறு வாரங்களில் இம்மாதம் முடியும்வரை புத்தகசாலை முழு நேரமும் திறந்து வியாபாரம் நடைபெறும்.

**சுன்னாகம்: தனலக்ஷுமி புத்தகசாலை**

# பரீட்சைப் பிசாசு

[ஒற்றையங்க நாடகம்]

சொக்கன்

### நாடக பாத்திரங்கள்

**கந்தசாமி:**— ஓர் ஏழை மாணவன். எஸ். எஸ். ஸியிற் படித்துவிட்டு வறுமையின் கொடுமையினுற் கல்லூரியினின்று விலகியவன்.

**சந்திரன்:**— கந்தசாமியின் நண்பன்.

**பார்வதி:**— கந்தசாமியின் தாய்:

**சுப்பிரமணியம்:**— கல்விப் பகுதி லிகிதர்:

**செல்லப்பர், கந்தையாபிள்ளை** } இளைப்பாறிய இரு உத்தியோகஸ்தர்:

மற்றும் கல்விப்பகுதித் தலைமை லிகிதர், கந்தசாமியின் சகபாடிகள் முதலியோர்.

[சம்பவம் யாவும் கற்பனை]

#### காட்சி 1

[சந்திரன் சைக்கிளிற் போகிறுன். கந்தசாமி காண்கிறுன்.]

**கந்தசாமி:**— ஹலோ சந்திரன்! எங்கே இவ்வளவு அவசரமாய்ப் போகிறுய்?

(சைக்கிளை விட்டுச் சந்திரன் இறங்குகிறுன்.)

**சந்திரன்:**— ஓ! கந்தசாமியா? நீ இப்பொழுதும் கேதீஸ்வர கொலிஜில் தானே படிக்கிறுய்?

**கந்:**— படிப்பைக் கை கழுவி ஒரு திவசத்துக்கு மேலாகிறது சந்திரன்.

**சந்:**— அட நான் தான் 'ஓவ ரேஜ்' என்று விலக்கப்பட்டேன்; நீ?

**கந்:**— நான் விலகினேன்.

**சந்:**— ஏன்ராப்பா! நல்லாய் வர உனக்கு விருப்பமில்லையோ? அதோடை நீ படிக்கக்கூடியவன். இப்போது அங்கிருந்தால் எஸ். எஸ். ஸி. எடுத்திருக்கலாமே.

**கந்:**— எடுத்திருக்கலாம்; முதற்றரமாகப் பாஸ்பண்ணவும் முடியும்; ஆனுல் சந்திரன்! நேரத்துக்குக் கஞ்சியின்றிக் கட்ட ஆன துணியுமின்றி இருக்கும் என்போன்றவர்களுக்குக் கல்லூரி சரிப்பட்டு வராதப்பா. அதனுல்தான் விலகிவிட்டேன்.

**சந்:**— ம் (பெருமூச்சு விட்டு) படிக்கக்கூடிய உன் போன்றவர்களுக்கு இந்தக் கஷ்டம். நானே வருஷா வருஷம் பதினைந்து ரூபாய்களைத் தர்ப்பணம் பண்ணுகிறேன்; பரீட்சைகள் வருகின்றன! போகின்றன. என்னில் இரக்கம் காட்டவேண்டுமே; கிடையாது. இப்பொழுது கூடப் பதினைந்து ரூபாவுடன் அதற்குத்தான் போய்க்கொண்டிருக்கிறேன்.

**கந்:**— ஓகோ. எஸ். எஸ். ஸிக்கு 'அப்ளிக்கேஷன்' போடப் போகிறுயோ? வீணுய் உன்னைத் தடைப்பண்ணிவிட்டேன்; மன்னித்துக்கொள்.

**சந்:**— நீ மறிக்காவிட்டால், நான் பரீட்சையில் பாஸ்பண்ணி விடுவேனுக்கும். சும்மா போப்பா. சரி! நேரமாகிறது நான் வரட்டுமா கந்தசாமி. நீகூட 'ரிஸை' பண்ணிப்பார்க்கலாமே. இந்த முறைதான் போட்டுப் பாரேன். கட்டாயம் வாய்க்கும்; சரி; நான் வருகிறேன். 'சேரியோ'.

**கந்:**— 'சேரியோ' (தனக்குள் யோசிக்கிறுன்) நான் ஒரு முறை 'அப்ளிக்கேஷன்' 'பிரைவேட்'டாய்ப் போட்டாலென்ன? சந்திரன் தாவழியே விடாப்பிடியாய் இருக்கும்போது, வகுப்பில் முதலாயிருந்தநான் கட்டாயம் போடத்தான் வேண்டும். ஆனுல் பணம்? அப்படிப் பதினைந்து இருபது ரூபா அம்மா மாறித்தர மாட்டாவா? பார்ப்போம்.

திரை

#### காட்சி 2

[பார்வதி அப்பொழுதுதான் உலையை இறக்கிவிட்டு வெளியே வருகிறுள். கந்தசாமி வருகிறுன்.]

**பார்வதி:**— என்னடா தம்பி! வெயிலுக்கை எங்கே போட்டு வாருய்? நாளைக்குத் தலையிடி என்றுல், ஒரு சுக்குத் தண்ணிக்குக் கூட வழியில்லை. ஏன்? ஆறுதலாய்ப் பின்னேரத்திலே, தெருவழிய திரியலாமே? ஏதேன் அலுவல் கெட்டுப்போகுதோ?

**கந்தசாமி:**— இல்லை! அம்மா! வாசிகசாலைக்குப் போனேன். அம்மா! எத்தனை நாளைக்குத்தான் நீ கஷ்டப் படப்போகிறுய்? இந்தமுறை எஸ். எஸ். ஸி. எடுத்துப் பாஸ்பண்ணினுல், ஏதாவது ஒரு சின்ன வேலை என்றுலும் பார்க்கலாமே. அதுக்கு?

**பார்:**— அதுக்கு? ஏன் இழுக்கிறுய்? அதுக்கு என்ன வேணும்?

**கந்:**— 'அப்ளிக்கேசன் பிரைவேட்'டாய்ப் போடவேணும். எல்லாமாய் இருபது ரூபாவெண்டாலும் வேணும்.

**பார்:**— இருபது ரூபாய்! இருபது ருபாய்! நான் ஏங்கை போவன் இருபது ரூபாய்க்கு? நெருப்புத் திண்டு திண்டு என்னை கண்கூடத் தெரியாமல் போகுமோ எண்டு பயமாயிருக்கு. என்னை ஓடாக்கிப் பாடுபட்டாலும், ஒரு வேளை சரியாச் சாப்பிட வகையில்லை. இருபது ரூபாய்!

**கந்:**— அம்மா! ஆரிட்டையாவது மாறித்தா அம்மா!

**பார்:**— ஆரிட்டை மாறிறது? என்னை நம்பி ஆர் தரப்போகினை? (அழுகிறுள்) உன்ரை அப்பர் கிடந்ததையெல்லாம், கோதாரி விழுத்திவிட்டுப் போய்விட்டார். என்னிட்டை ஒரு வெள்ளியைப் பொன்னை ஏதாவது கிடக்குதே வித்துத்தர? இந்த ஆசையை விட்டிட்டு உன்ரை படிப்புக்கேற்ற, ஏதாவது ஒரு சின்ன வேலையைப் பார்மோனை.

**கந்:**— அம்மா! நான் என்ன செய்வேன்? எந்த வேலைக்குப் போனுலும் 'நீ எஸ். எஸ். ஸி. பாஸ்பண்ணியிருக்கிறுயோ?' என்று தான் கேட்கிறுர்கள். அதற்குக் குறைந்தால் கையை விரித்துவிடுகிறுர்கள். நான் என்ன கூலி வேலை செய்யப்போவதா? நீதான் சொல்லு?

**பார்:**— உன்னை யார் கூலி வேலை செய்யச் சொன்னது? கோவியாதை தம்பி, இருபது ரூபாய்க்குக் குறைஞ்சால் அனுப்ப முடியாதோ? சோதனைக்கு முந்தி மிச்சத்தைக் கட்டிவிடலாம்.

**கந்:**— ஐயோ! அம்மா! சட்டத்துக்கு இருதயமில்லை; அது சொன்னுல் சொன்னதுதான். நீ இவ்வளவு கஷ்டப்படுகிறுய். "இரண்டு பணத்துக்குத் தோசை தா?" என்று கேட்டுவாங்கி யுண்டவன் கடனென்று சொல்லிப் பின் கைவிரிச்சாலும் மனம் நோகாமலிருக்கிறுயே! அந்த மனப்பான்மை சட்டத்துக்குக் கிடையாதம்மா! அது பிடித்தால் பிடிதான்; அழுங்குப்பிடி.

**பார்:**— என்னவோ நீ சொல்லுறதொண்டும் எனக்கு விளங்கவில்லை! இப்ப என்னை என்னசெய்யச்சொல்லுகிறுய்?

**கந்:**— உன்ரை கஷ்டம் சீக்கிரம் விடியவேண்டுமென்றுல் எப்படியாவது ஒரு இருபது ரூபா மாறித்தா.

**பார்:**— (யோசிக்கிறுள்) உனக்கு இல்லாமை இதை என்னத்துக்கு! இந்தா இந்தக் காதோலையைக் கொண்டுபோய் வித்திட்டு அப்பிளிக்கேசன் போடு.

**கந்:**— (கந்தசாமி அழுகிறுன்) அம்மா!

**பார்:** அழாதை தம்பி, என் அழுருய்? எப்பவோ ஒரு நாளைக்கு எங்கடை கஷ்டம் விடியுந்தானே! போ; போ; அப்பிளிக்கேஷனைப் போடு.

திரை

#### காட்சி 3

[இரவு பன்னிரண்டு மணியாகிறது: கந்தசாமி அப்பொழுதும் படித்துக்கொண்டு இருக்கிறுன்].

**பார்வதி:** என்ன தம்பி சாமமாகப் போகிறது! இன்னும் படித்துக்கொண்டிருக்கிறுய். அங்கை கேள். கோயில் மணியடிக்குது (எண்ணுகிறுன்) பன்னிரண்டு மணி, வந்து சாப்பிடுமோனை. இப்படிப் படிச்சால் தேகம் என்னத்துக்குக் கூடும்?

**கந்த:** இல்லையம்மா இந்தக் குறிப்புக்கொப்பி நாளைக்குக் கொடுத்திடவேணும். அவன் தருவதற்கே, எவ்வளவோ அருக்குப்பண்ணினுன். இதை எழுதிமுடிச்சிட்டுப் படுத்திடுகிறன். நீ நித்திரைகொள்ளு.

**பார்:** அதுக்கு எண்டாலும் வெள்ளன நான் தோசை சுடுறதுக்கு எழும்பக்குள்ளே, எழுப்பிவிடுறன். இருந்து ஒன்பது பத்துமணி மட்டும் எழுது. இப்ப சாப்பிடவா.

**கந்:** உன்ரை கரைச்சல், பெரியய கரைச்சல். சரி வா, சாப்பிட.

திரை

—(தொடரும்)


**உடுப்பிட்டி**

**ஆங்கில பெண்பாடசாலை**

**ஆரம்பிக்கும் நாள்**

**1952-ம் ஆண்டு தைமாசம் 7-ம் திகதி திங்கட்கிழமை**

புதிதாகப் பள்ளிக்கூடத்தில் சேர விருக்கும் மாணவரின் பிரவேசப் பரீட்சை, தை மாதம் 5-ம் திகதி முற்பகல் 10 மணிக்குப் பள்ளிக்கூட மண்டபத்தில் நடைபெறும். பிரவேசப் பத்திரம் பள்ளிக்கூடக்கந்தோரிற் பெற்றுக்கொள்ளலாம்.

இ. ம. வி. வன்னியசிங்கம்
பள்ளிக்கூடத் தலைவி

[4498]





நமது வாசிகசாலையில் விமர்சனத்துக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதனைக் கவனிப்பாராக.

**ராஜ்யம்:** ஆசிரியர், க. சந்தானம்; பிரசுரம் சக்தி காரியாலயம், சென்னை 14 விலை ரூ. 1-0-0.

உயர்ந்த ஒரு தேச பக்தரும் அரசியல்—சட்ட கல்வி மேதையும், இப்பொழுது இந்திய மத்திய அரசாங்கத்தில் உதவிப் போக்கு வரத்து மந்திரியாகவும் இருக்கும் திரு. க. சந்தானம் எம். ஏ., பி. எல் அவர்களால் எழுதப்பட்ட இந்தநூல் கட்டாயம் எல்லோராலும் படிக்கப்பட வேண்டியதொன்றுகும்.

ராஜ்யம் அல்லது அரசியல் என்பது நேரம் எடுத்து நுணுக்கமாக ஆராய்ந்து படிக்க வேண்டிய ஒரு விஷயமாகும். அப்படிப் படித்தும் அதன் நுணுக்கங்களைப் புரிந்து கொள்பவர் மிக சிலரே. அதற்காக அந்தப் பரந்த விஷயத்தின் அடிப்படைக் கொள்கைகளையாவது அறிந்துகொள்ள முயற்சிக்கக் கூடாது என்பது அல்ல. அரசியல் என்பது பிரஜை ஒவ்வொருவனையும் சம்பந்தப்பட்ட விஷயம். எதற்காக ராஜ்யம் என்பது ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் பிரஜையின் கடமையும் உரிமையும் என்ன, எதற்காக வரி கொடுக்கிறேம், சட்டம் எவ்வளவு தூரம் பிரஜையைப் பாதுகாக்கிறது, அரசாங்கத்திற்காக எவ்வளவு தூரம் பிரஜை தன் தனிச் சுதந்தரத்தை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது முதலியன போன்ற விஷயங்களைப் பொதுப் படையாகவாவது அறிந்துகொள்ள வேண்டியது நன்மை தரும் என்பது மட்டும் அல்ல, அது ஒவ்வொருவரின்கடமையுமாகும்.

சிக்கலான இந்தப் பிரச்சனைகளை முரண்பாடு கொண்ட சர்ச்சைகள் இல்லாமல், எல்லோரும் விளங்கிக்கொள்ளக்கூடிய ஒரு தமிழ்ப் புத்தகம் பலகாலம் தேவையாக இருந்தது.

அந்தத் தேவையை இந்தப் புத்தகம் பூர்த்தி செய்கிறது.

எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் கூட மற்றவர் வாசிக்கக் கேட்டு விளங்கிக்கொள்ளக்கூடிய அவ்வளவு இலகுவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. எல்லோரும் வாங்கிப் படிக்க வேண்டிய புத்தகம்.

—"இலங்கையர்கோன்"

**புதிய சீனுவிலே:** ஆசிரியர்: எஸ். ராமநாதன் பிரசுரம் சக்தி காரியாலயம், ராயப் பேட்டை. சென்னை 14. விலை ரூ. 1-12-0.

இது ஒரு 'சிவப்பு'ப் புத்தகம். அதாவது, கொம்மியூனிஸ்ட் ஒருவரால் எழுதப்பட்ட, ஸ்டாலின் வகுக்கும் வழியைப் பின்பற்றும் மாஸேதுங் ஆட்சி முறையை வியந்து உரைக்கும் புத்தகம்.

கொமிண்டாங் கட்சியின் ஆட்சியில், ஆசிரியர் கூறுவதுபோல், அவ்வளவு சுயநலப்பற்று இல்லாமல் இருந்திருந்தால், மிக முதிர்ந்த நாகரீகம் வாய்ந்த சீமைக்கண், அந்த ஜனநாயக ஆட்சியையே ஆதரித்திருப்பார்கள்.

'இரும்புத் திரை' க்குப் பின்னுல் என்ன நடக்கிறது என்று அறிந்துகொள்வது க்ஷாத்யமில்லை. அதனுல் இப்புத்தகத்தில் கூறப்பட்டிருப்பவை எவ்வளவு தூரம் உண்மை என்று சொல்வதற்கில்லை. சிறுபான்மைக் கட்சியினர் மிகப் பெரியதொரு தேசத்தை ஆயுதபலம் கொண்டு ஆளுகையில் அதில் விரும்பத்தகாத அடக்கு முறைகள் இருந்தே தீரும்.

### கிடைக்கப்பெற்றேம்

சரஸ்வதி பஞ்சாங்கக் கலண்டர்: 1952-ம் ஆண்டுக்குரிய இக் கலண்டர் கொழும்பு சரஸ்வதி புத்தகசாலையாரால் வெளியிடப்பட்டது. இதில் மாதத் தேதிகள் அடங்கிய 12 தாள்களும், கொக்குவில் வாக்கிய பஞ்சாங்க முறைப்படி கணிக்கப்பெற்ற தமிழ், அரபுத் திகதிகளும்; திதி, நக்ஷத்திரம், இராகு காலம் விரத விசேட தினங்களும் அடங்கியுள்ளன.

### யாழ்ப்பாணம் புகையிரத நிலையம்
#### திருத்தங்கள் அவசியம்


யாழ்ப்பாணம் புகையிரதப் பிரயாணிகள் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டமொன்று சமீபத்தில் நடைபெற்றது. மருதானைக்குங்கோட்டைக்கும் அடுத்ததாகயாழ்ப்பாணப்புகையிரத நிலையம் இடம்பெறுகின்றது. எனவே இந் நிலைக்கேற்ற சகலவசதிகளும் அமைந்த நிலையம் அவசியமெனத் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம். பி. அவர்கள் இக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசினுர். காங்கேசந்துறைக்கும் கொடிகாமத்துக்குமிடையில் இரட்டைப்பாதை அமைத்துப் புகைவண்டிகள் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யவேண்டுமெனவும் தலைவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற் புகைவண்டிகள் மக்களுக்குச் சேவை புரியத்தக்க வசதிகளுடன் ஓடுவதற்கான ஒழுங்குகள் செய்யவேண்டுமெனக் கோரிப் பல முக்கிய தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

### இளைஞர் விவசாயக் கழகம்

வவனியா நொச்சிக்குளம் றேமன் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை இளைஞர் விவசாயக் கழகம் சமீபத்தில் ஒரு மகத்தான வேலையை ஆரம்பித்தது. கிராமத்துக்கு இவ்விதமுயற்சி இதுவே முதன் முறையானது. உணவுத் தட்டுப்பாட்டை உணர்ந்து இக் கழகத்தினர் கிராமவாசிகட்கு உணவு விருத்திக்குரிய வழியை எடுத்துக்காட்டினர்.

கழக இளைஞரும் தலைமையாசிரியரும், நொச்சிக்குள வயலில் நாற்றுநடுவதற்கு அணிவகுத்துச் சென்றனர். கமத்தொழில் ஆசிரியரும் கிராம முன்னேற்ற உத்தியோகத்தரும், கமத்தொழில் மேற்பார்வையாளரும் நடுதற்குரிய முறைகளை விளக்கிய பின் கழக அங்கத்தினர் நாட்டுப் பாடல்கள் பாடிக்கொண்டே அணியணியாகநின் நட்டனர்.




அருமையான மருமக்களே!

1952 பிறந்துவிட்டது. உலகத்துக்கு வயது ஏறிக்கொண்டுபோவது போலவே எனது மருமக்களுக்கும் வயது கூடிக்கொண்டே போகின்றது. எங்கள் பாலர்பகுதியிற் கீழ்ப் பிரிவிலிருந்த மருமக்களிற் சிலர் இவ்வாண்டு மேற்பிரிவிற் சேருவார்கள். ஒரு சில மருமக்களுக்கு வயது அதிகமாகிவிட்ட படியாற் பாலர் பகுதியினின்றும் விலகவேண்டி இருக்கின்றது. இவர்கள் அங்கத்தவர்களாக இல்லாதுபோனாலும் தங்கள் அன்பர்கள் எழுதுங் கட்டுரைகளையுங் கதைகளையும் தவறாது வாசித்து மகிழ்கின்றார்கள். புதுவருடக் கொண்டாட்டங்களைப்பற்றி ஒருவரும் எனக்குக் கட்டுரைகள் எழுதி அனுப்பவில்லையே! அனைவருக்கும் ஆசீவாதம்.

கேசரிமாமா

# நான் விரும்பும் நூல்

மே.586 க. கணேசலிங்கம்

நான் விரும்பிக் கற்கும் நூல்களுள் என்னைக் கவர்ந்த நூல் திருக்குறளேயாகும்.

இது இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் என்ற புலவரால் இயற்றப்பட்டது. உலகத்திலே மானிடரால் பெரிதும் விரும்பப்படுவது இது ஒரு நூலே. அதனாலன்றோ இன்று அறுபத்தாறு மொழிகளில் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இதனை இயற்றிய திருவள்ளுவப் பெருந்தகையார், இல்லற வாழ்க்கையை நடத்துங்கால், அப்போதிருந்த கடைச் சங்கப் புலவர்களின் வேண்டுகோட்கிணங்கித் தேனினுமினிய செந்தமிழில் திருக்குறள் என்னும் நூலைப் பாடியருளினார். பின் அப்போதிருந்த கடைச் சங்ககாலப் புலவர்களிடம் ஒப்படைத்தார். அந்த நூலை அவர்கள் மிக விருப்பத்துடன் வரவேற்றனர்.

பல பிழைகளை உடைய பாடல்களைக் காணும்போது, தன் எழுத்தாணியால் தனது தலையிற் குற்றி, எந்நேரமும் இரத்தமும், சீழும் வடியும் தலையையுடையவராதலால், காரணப் பெயர்பெற்ற சீத்தலைச்சாத்தனார் இத் திருக்குறளைக் கண்டபோது, அதில் ஒரு பிழையுமில்லை என்று ஆனந்தமடைந்தார். தனது எழுத்தாணியால் தலைக்குக்குற்றுது, முன் உள்ள புண்களும் மறைந்துபோயின. பலபுலவர்கள் இந்நூலைப் புகழ்ந்து பாடினர். திருவள்ளுவரின் சகோதரியாகிய ஔவைப்பிராட்டியார் பாடியது:—

'கடுகைத் துளைத்து எழ்கடலைப்
புகுத்திக் குறுகத் தறித்த குறள்.'

இந்நூல் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்வெண்பாக்களைக்கொண்டது. இரண்டுவரிகளை யுடையதாதலால் குறள் என்றும், மேன்மைபற்றித் திருக்குறள் என்றும் புகழ்ந்துகூறினர். இந்நூலுக்குப் 'பொய்யாமொழி', 'தேவர் குறள்', 'திருவள்ளுவர்', 'உண்மைநூல்' எனப் பல பெயர்கள் உண்டு.

இப்படியே இந் நூலின் பெருமையை எழுதிக்கொண்டு போகலாம்.

மாணவர்களாகிய நாங்கள் திருக்குறளிற் காணப்படும் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களையும் ஆயிரத்து முந்நூற்றுமுப்பது பொன்மணிகள் போலப் பாவித்து, அவற்றில் உள்ள உண்மைகளை எங்கள் வாழ்க்கையிற் பயன்படுத்தி, அவற்றிற் கூறிய நீதியின்படியே செல்வோமாக. இந் நூல் பாமரர்க்கும் படித்தவர்க்கும் நீதியை விளக்கி, உண்மையைப் புகட்டி, நல்வழிப்படுத்தும் என்பது திண்ணம்.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

பங்குப் பணம் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானு ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா கோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4488]


## மாமா பதில்

**மே.586 க. கணேசலிங்கம்;** ஆமாம், பத்தாவது பரிசுப் போட்டியை விரைவில் ஏற்படுத்துவேன். நீர் அதிற் பங்குபற்றி வெற்றிபெறவேண்டும்.

**மே.267 ந. சிவபாதம்;** மதுரை சென்று திரும்பியிருப்பதையறிந்து மகிழ்கின்றேன். கட்டுரை கிடைத்தது. இன்னும் படித்துப் பார்க்கவில்லை.

**மே.576 கே. கமலம்;** மண்டூரின் பெருமை நாடறிந்தது. கட்டுரை நன்று. பார்சல் கிடைத்ததா?

**மே.572 வே. மகேஸ்வரன்;** அழகாக எழுதியிருக்கின்றீர்.

**மே.570 வி. செல்வத்துரை;** தமிழ்மொழி இனிது, ஆட்சேபமில்லை.

**மே. 368 வே. வெள்ளைச்சாமி;** உமது வீரன் உண்மையாகவே வீரன்தான்!

**மே.389 நா. பொ. தருமலிங்கம்;** நீர் சோஷலிஸ்ட் பத்திரிகையின் உதவியாசிரியராக இருப்பதையறிந்து பெருமையடைகின்றேன். உமக்குப் போதிய ஆர்வம் இருக்கின்றது.

**மே.523 என். சோமசுந்தரன்;** ஒருவர்மீதும் எனக்கு வெறுப்புக்கிடையாது. ஆம் சுருக்கமாகச் சுவையாக எழுதவும்.

### பிறந்த தின வாழ்த்துக்கள்

6-1-52 — 12-1-52

கீ.41 சி. சிறீஜெகதீசன்; கீ.53 செ. மகேஸ்வரன்; மே.73 பொ. செல்வவிநாயகமூர்த்தி; மே.188 து. மகாலிங்கம்; மே.414 இ. இராசலட்சுமி; கீ. 518 செ. ஞானப்பு;

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.


## கூடிவா

— இதம் —

குருவி குருவி கூடிவா
கூட்டமாகப் பறந்துவா
குளவி குளவி கூடிவா
கூடுகட்டப் பறந்துவா
குட்டி குட்டி கூடிவா
குடிக்கப்பாலீ கூடிவா
குஞ்சு குஞ்சு கூடிவா
கொத்தித்தின்ன ஓடிவா
பாலா பாலா கூடிவா
பாடிவிளை யாடவா
காலை மாலை கூடிவா
கருதிப்பாடம் படித்துவா.

மிருகங்களும் பறவைகளும்

# பசு



மே. 523 N. சோமசுந்தரம்

பாலர்பகுதி அன்பர்களே!

ஆறறிவுபடைத்த மனிதன் பின்பற்றக்கூடிய சில நல்ல குணங்களை மிருகங்களும் பறவைகளும் எமக்குப் போதிக்கின்றன.

பசுவைப்பாருங்கள்: அது ஒரு வீட்டு மிருகம். அதனிடத்தில் நாம் பின்பற்றக் கூடிய நற்குணங்கள் சில அமைந்துள்ளன. அது சாந்தமே உருவெடுத்த மிருகம். கழுத்திலுள்ள மணி "கணீர்.........கணீ"ரென ஓசை ஒலிக்க, களங்கமில்லாத களிப்புடன் காட்சிதரும் பசு உருண்டு திரண்ட மடியிலிருந்து கபடமில்லாது பாலைக் கறந்து கொள்ளும்படி விடும். சிறு குழந்தைமுதல் குடு குடு கிழவன் வரை பசுவுடன் தாராளமாகப் புழங்கலாம். எட்டிநில் என்று முட்டி மோதவராது. அவ்வளவு சாந்தம்; பொறுமை. மற்றைய மிருகங்களைப் போற் கோரமான தோற்றமுடையதல்ல. தன் கன்றைக் கண்போலப் பாதுகாக்கும். அதை நக்கி நக்கி அழகாகவைத்திருக்கும். அடித்தால் உதைத்தாற் கூட வாங்கிக் கொள்ளும். ஆம், பசு சாந்தத்தின் சின்னம். பொறுமைக்குப் பொக்கிஷம். பசுவின் சாந்தமான குணத்தை நாமும் பின்பற்றின் நலம் பெறுவோம்.

## இசைத்தமிழ் நிலையம்

இசைத்தமிழ் நிலையத்து நிர்வாகஸ்தர் திரு. என். சண்முகரத்தினம் அவர்கள் நிலையத்தின் நோக்கங்களைப்பற்றி எழுதுவதாவது:

**நோக்கங்கள்**

சந்தாதாரரின் பிள்ளைகளாயுள்ள ஆரம்பவகுப்பு மாணவர்களுக்கு இலவசப்பயிற்சியளித்துத் தமிழிசையைவளர்த்தல்; இசை நூல்களும், இசைக்கருவிகளும் கொண்ட ஒரு நூல் நிலையத்தை நிறுவி நடாத்துதல்; மாதாந்த இலவச இசையரங்குகள் ஏற்படுத்துதல், இசை ஞானிகளைக் கௌரவிக்கும் முகமாக விழாக்கள் கொண்டாடுதல்; வருடாந்த மகாநாடுகள் கூட்டுதல்; சுகவீனம் அல்லது வயோதிபம் காரணமாகக் கஷ்டமுறும் இசைவித்துவான்களுக்கும், உயர்தர சங்கீதங் கற்பதற்காகத் திறமையுள்ள வறிய மாணவர்களுக்கும் பண உதவிபுரிதல்; இசைத்தமிழ், இலக்கியம்; சித்திரம் முதலியன சம்பந்தமான கட்டுரைகளைக்கொண்ட மாதாந்த சங்கீத சஞ்சிகை ஒன்று வெளியிடுதல்.

**அங்கத்துவம்**

வருடாந்தம் குறைந்தபட்சம் ரூபாய் 15-கட்டணமாகச் செலுத்தும் சகல சங்கீத வித்துவான்களும், கலைஞர்களும், இலக்கிய இரசிகர்களும், சங்கீத அபிமானிகளும் அங்கத்தவர்களாவதற்கு அருகதையுடையர். சங்கீத அபிமானிகள் அனுதாபிகள் அனைவரும் கீழ்க்காணும் விலாசதாருக்குப் பணம் உதவிப் பற்றுச்சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

என். சண்முகரத்தினம்,
இசைத்தமிழ் நிலையம்,
உடுவில், சுன்னாகம்; (இலங்கை)

## பகவத்கீதை வெண்பா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றுரைத்தேன் ஈதுமறை யெவற்றின் உத்தமமென், றென்ற உணர்ந்திடுவாய் உற்று.

**பகவத்கீதை வெண்பா**

என்றென்று தர்மம் இளைப்படையும் இப்புவியில், என்றென்று அதர்மம் எழுச்சிபெறும் — அன்றன்று, பண்பாலே என்னைப் படைத்தருளாற் போதருவேன், திண்பாரில் நீஇதனைத் தேறு.

நல்லாரைக் காத்தற்கும் நன்மையறு தீயவரை, வல்லாய் அழித்தற்கும் வந்திதிப்பேன் — அல்லாதும், செவ்வே அறத்தைத் திரமாக நாட்டுதற்கும், ஒவ்வோர் உகந்தனிலும் உற்று.

"தர்ம் ஸமஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகேயுகே"

ஆராய்ச்சியாளர் குறிக்கப்பட்டுள்ள நூல்களை நன்கு பயின்று தம் கருத்தினைவெளியிடுங்கால் யாம் முன்கூறியாங்கு 'பெரியதம்பிப்பிள்ளை பாரத வெண்பா' வென வழங்குவதே ஏற்புடைத்தாமாது தெளியப்படும்.

மேலும் மொழிவளர்ச்சியில் கண்ணுங் கருத்துமுடைய சங்கத்தார் காலத்துக்கும் தம் கண்ணியத்துக்கும் பொருந்தத் தம் சங்கத்தின் பெயரை மாற்றியமைப்பது முறையாமெனக. என்னை? ஆரிய பாஷை என வழங்கும் பாஷையும் திராவிடபாஷை எனவழங்கும் பாஷையும் இக்நாள் அறியக்கிடவாமையின் சமஸ்கிருதம் தமிழ் என்றுவது வடமொழி தென்மொழி என்றுவது வழங்குதலே சிறப்புடைத்தாம் என்க.

—தேவிதாசன்

### ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

பிறந்ததிகதி: ..............................

..............................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்


புத்தகங்கள். பத்திரிகைகள். விற்பனையாளர்கள்.

தமிழ்ப்பண்ணை

யாழ்ப்பாணம். இலங்கை.

*The* **EeLAKESARI**

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union

Founder: N. PONNIAH

| Vol. 22 | Chunnakam, Sunday, Jan., 6, 1952 | No. 26 |
|---|---|---|



## சந்தா விபரம்

**ஆண்டுச் சந்தா:**

இலங்கை-இந்தியா ரூ. 6-00

மலாயா — $ 6-00

தனிப் பிரதி சதம் 10. காசு 10


# சித்திரமணிக் கோபுரம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதும் அவன் பெயர் 'சங்கர' என்பதும் புலனுயிற்று. கணவன் ஒரு மதமும் மனைவி இன்ெனுரு மதமுமாக இருந்து வாழ்ந்து வந்தனரோ என்ருல் அது உண்டு என்பதும் நின்றசீர் நெடுமாறனும் மங்கையர்க்கரசியாரும் அவ்வாறு வாழ்ந்தமையே அதற்குச் சான்று என்பதும் அரசர்கள் அரசதந்திரத்துக்கேற்ற நாட்டை அபகரிக்கக் கருதி ஒத்து வலிமைபடைத்த அரசரிடம் மகட்கொடை கொண்டு தம் ஆட்சியை ஸ்திரப்படுத்தும் வகையில் நந்திவர்மனும் தன்குடிக்கொத்த அழகில் திருவனைய 'சங்காவை' மணந்தானென்பதும் தன் உயிரினும் இனிய மனைவியின் அங்கங்களைக் கூடச் சமய மூறுக்குக் காரணமாகத் தடிந்தான் என்பதும் புலனுகிறது.

### சமயவெறியா?

சமய வெறியால் சைவர்கள் சமணரைக் கழுவேற்றினர்களா? அல்லது தாமே ஏறினர்களா? என்ற ஆசங்கை மக்களிடை நிகழ்கிறது. இது ஆராயப்படவேண்டியது 'இன்னகாரியம் செய்யாவிடின் கழுவேறுவோம்' எனச் சமணர் தாமே கழுவேறினர் தோல்வியுற்றமையால் என்பது சரித்திரத்தாலறியக் கூடியதாக இருக்கிறது. இதற்குமாருகச் சமணர் சமயம் வாய்த்த போதெல்லாம் மறுசமயத்தவரைக் கழுவிலேற்றினர்என்பதற்குச் சான்று தேவாரத்திலுண்டு.

ஆயின் அக்காலத்துக் கழுவேற்றல் முதலிய கொலைகட்கு அரசாங்கம் உடந்தையாக இருந்ததா என்பது வினு? சமயம் என்பது அக்காலத்துக் கொள்கைப்படி மற்றையோர் தலையிடமுடியாத சுய நிர்ணயத்தைப்பொறுத்ததாகும். அக்காலத்திருந்த பைரவம் காபாலிகம் போன்ற ஆலயங்கள் உயிர்ப்பலியையே தெய்வங்கட்கு இட்டுப்பூசித்தமை நூல்களில் பரக்கக்காணலாம். அக்கால மக்கள் தம் தெய்வங்கட்கு முன்னே நின்று தமது கழுத்தைத் தமது கையாலே வெட்டித் தெய்வத்துக்குப் பலியிட்ட சரித்திரங்கள் காணப்படுகின்றன. சமயப்பித்தும் அதிலே கொண்ட உணர்ச்சி வேகமும் அவர்களை அவ்வாறு செய்யத்தூண்டியது. ஒரு ஸ்தலத்தில் ஒருசிலை இருக்கிறது. அயலே இரண்டு ரிஷிகள் கழுவில் குத்திவிடப்பட்ட நிலையில் தவம் செய்கிருர்கள். பக்தர்கள் முன்னே தொழுகிருர்கள். இப்படிப்பட்ட உருவங்கள் அசம்பாவிதமானவையாயின் அவற்றைக் கேவலமாக இப்படி ஏன் ஆக்கியிருக்கவேண்டும்? ஆகவே அவை அக்கால மனநிலைக்கேற்பத் தெய்வங்கட்குப் பலியிட்டு நடைபெற்று வந்தனவென்றே கொள்ளவேண்டும். இவற்றுக்கெல்லாம் காரணம் அந்தக் காலத்து மக்களின் மனநிலையும் சமுதாயக் கொள்கையுமாகும். இவ்வாருன சமயச் சடங்குகளுக்கிடையில் அரசனது ஆணை செல்லமுடியாது. ஏனெனில் இவை தமது சுய நிர்ணய உரிமையைப் பொறுத்தவையாகும்.

### மணிக்கோபுரம்

தோமாஸ் போப் என்னும் ஆங்கில அறிஞர் கழுவேறிய செய்தி நடந்திருக்க இயலாதென்று ஐயமாகவே தமது நூலில் எழுதியுள்ளார். ஆனுல் சமயப்பூசலே இவ்வாறெல்லாம் செய்வித்ததென்பதும் அக்காலச் சமுதாய மக்களுக்கு அவர்களுயிரினும் சமய ஒழுக்கமே பெரிதாகத் தோன்றியதென்பதும் தெளிவு.

சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய காப்பியங்களின் நடைக்கும் ஆயிரம் ஆண்டுகட்குப் பின்னேவந்த பெரிய புராணத் தெளிந்த நடைக்கும் பேதம் காண்போருக்கு நன்கு விளங்கும். அவ்வக் கால இலக்கிய உலகும் மக்கள் பண்பாடுமே இலக்கிய நடை மாற்றத்துக்கு அடிப்படையாகும். சேக்கிழார் பெரிய புராணத்துக்கு 300 ஆண்டு கட்குப் பிற்பட்ட கம்பர் இராமாயணம் சிறிது முறுக்குள்ள செய்யுட்களாகச் செல்வதை நோக்கினுல் மக்கள் யாவரும் உணர்ந்து கைக்கொள்ளவும் சைவ சமய மோங்கவும் கருதியே பெரிய புராண நடை மிக இனிமையும் தொன்மையும் உண்மையும் சமுதாயப் பண்பும் கலந்ததாகக் காட்சியளிக்கிறதெனலாம்.

சுருங்கக் கூறின் சைவ சமயக் கோட்பாடு என்னும் செங்கற்களை உண்மையும் ஒழுக்கமும் கலந்த சாந்திறுற் பூசியாக்கப்பட்ட சித்திர மணிக் கோபுரமாகப் பெரிய புராணம் விளங்குகிறது. யான் ஒரு சமயத்தைச் சேர்ந்தவனுமல்லன், ஒருசமயத்தில் ஓரபக்கமாக மனம் கொண்டவனுமல்லன். ஆனுல் உண்மை நெறி ஒன்றே எனது கொள்கை. அந்த அளவுகருவிகொண்டு என் அறிவுக்கெட்டியவரை ஆராய்ந்த மட்டில் சேக்கிழார் பெரியபுராணம்போல் இதுவரை ஒரு நூல் உண்மை புகலத் தோன்றியதுமில்லை. இனித் தோன்றப் போவதுமில்லை.

[முதலாவது கட்டுரை ஈழகேசரி 23-12-51 இதழில் வெளியாகியுள்ளது.]


— விளம்பரம் —

கொழும்பு அல்லாத பிற இடங்களில் வசிப்பவர்கள், செலவும் சிரமமுமின்றி, எவ்வித 'மோட்டார் கார்'கள், 'வான்', லொறி' முதலியன விலைக்கு வாங்கவோ விற்கவோ விரும்பினுல் தபால் பெட்டி 931, கொழும்பு, என்ற விலாசத்துக்கு எழுதவும்.

Post Box 931, COLOMBO



## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 1241** Testy

தொல்புரம்
காலம் சென்ற தம்பிப்பிள்ளை இராசையாவின் மரண சாதனத் தத்துவ வழக்கில்,

தொல்புரம்
தம்பிப்பிள்ளை இராசையா கைம்பெண் சின்னம்மா
தத்துவகாரி

வட்டுக்கோட்டை
(1) இராசையா தியாகராசா
(2) இராசையா நடராசா (2-ம் எதிர்வாதி பராயமற்றவர். இவரின் பராமரிப்புக்காரன் 1-ம் எதிர்வாதி)

தொல்புரம்
(3) தம்பிப்பிள்ளை இராசையா மகள் புவனேஸ்வரி அம்மா. இவ்வின் பராமரிப்புக்காரன் வேலுப்பிள்ளை இராசகாரியார்
எதிர்வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 1241–ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விரிபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1952-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 26-ந் திகதி (26–1–52) சனிக்கிழமை மூற்பகல் 9 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகளின் விபரம்

1. வட்டுக்கோட்டையிறை "வாலாப்புலம்" நிலப்பரப்பு 10-ம் குளி 2-ம் பனைகள் வடலிகளும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, ஆறுமுகம் சுந்தரம்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் கணபதியார் வயித்திலிங்கம் வேலுப்பிள்ளைக்கும் பெண் சின்னத்தங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு, வேலுப்பிள்ளை சரவணமுத்துவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு, கள்ளியந்திடல் நாகபூஷணி அம்மன் கோவிலுக்கும் கணபதியார் வயித்திலிங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்களும், கை ஒழுங்கை முகப்பும், கணபதியார் வேலுப்பிள்ளைக்குரிய ஆதனமும். தெற்கு. கணபதியார் வேலுப்பிள்ளையின் ஆதனம், இதில் சொரியலாய் அரைவாசியும் கை ஒழுங்கைப் பாவிப்புரித்தும்,


2. தொல்புரமிறை "சொலிக்கி" நிலப்பரப்பு ஐந்து (5) செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு, கை ஒழுங்கை. வடக்கு முருகர் வயிரவநாதரின் ஆதனம். மேற்கு, கந்தப்பர் தம்பிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு, பழந்தெருவும் ஒழுங்கையும் இதடங்கலும் இன்னும் வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்கால் உருத்தும்.

3. தொல்புரமிறை "பெரிய தோட்டம் ஒல்லையும் பூமி வளவும்" நிலப்பரப்பு 8ம் எல்லை கிழக்கு, இராசகாரியர் பெண் சின்னுச்சிப்பிள்ளைக்கும் குமாரவேலு முருகேசுவிற்கும் பெண் இலட்சுமியாருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு, திரு. வீரசிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு, வயிரமுத்து பெண் சின்னத்தங்கத்தின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு, ஒழுங்கையும் மூத்ததம்பி சின்னையாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசியும் தெற்கெல்லைக்காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வை வழி வாய்க்காலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை,
19-12-1951 [4500]


இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.





இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா—சபாரத்தினம் அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1952-ம் ஆண்டு ஜனவரி மீ 6-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.